...ங்கள் எட்டு:
விலை ரூபா 5-00

Registered as a News Paper in SriLanka

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
...துறைப் படிப்பகம்

# வலம்புரி
## VALAMPURI

அசல் 22 கரட் தங்க
நகைகளுக்கு யாழ் நகரில்
சிறந்த ஸ்தாபனம்
**அர்ச்சனா ஜுவலர்ஸ்**
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1980)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 வைகாசி 3 வியாழக்கிழமை 17-05-2001 தொலைபேசி: 3378 ஒலி: 149

## ● கொக்காவிலில் புலிகளின் வாகன அணி மீது
# பாரிய கிளைமோர் தாக்குதல்
# தமிழ்ச்செல்வன் உயிர் தப்பினார்!

## ஒருவர் பலி, இருவர் காயம்

(வவுனியா நிருபர்)

**அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் சமாதான முயற்சியில் ஈடுபட்டுள்ள நோர்வேயின் சிறப்புப் பிரதிநிதி எரிக்சோல் ஹெய்மை சந்திப்பதற்காக விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையில் சென்ற சமாதானக் குழுவினரின் வாகன அணி மீது கொக்காவில் பகுதியில் வைத்து மேற்கொள்ளப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் தமிழ்ச்செல்வன் மயிரிழையில் உயிர் தப்பினார்.**

இத் தாக்குதலில் அவருக்குப் பாதுகாப்பாகச் சென்ற பஜிறோ வாகனம் முற்றாகச் சேதமடைந்ததுடன் அதில் பயணம் செய்த புலிப்போராளி ஒருவர் உயிரிழந்தார். இருவர் காயமடைந்தனர் என புலிகளின் குரல் வானொலி நேற்றிரவு அறிவித்துள்ளது.

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே சமாதான முயற்சியில் ஈடுபட்டுள்ள நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக்சோல் ஹெய்ம்மை மல்லாவியில் சந்திக்கும் ஏற்பாடுகளுடன் சென்ற புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் மீது நேற்று முன்தினம் மாலை கிளைமோர் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது.

விடுதலைப் புலிகளின் சமாதானக்குழு வன்னியின் நெடுஞ்சாலை வழியாக பயணத்தை மேற்கொண்டி

## நோர்வே சிறப்பு தூதுவர் ரணிலுடன் சந்திப்பு

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே சமாதானப் பேச்சுவார்த்தையினை ஏற்படுத்தும் நோக்குடன் கொழும்பு வந்துள்ள நோர்வேயின் சிறப்புப் பிரதிநிதி எரிக்சொல் ஹெய்ம் நேற்று முன்தினம் ஐக்கியதேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவை சந்தித்துப் பேசியுள்ளார்.

இந்தப்பேச்சுவார்த்தையின் போது சமாதானமுயற்சியில்மேற்கொள்ளப்படக்கூடிய அடுத்தகட்ட நடவடிக்கைகுறித்து நோர்வேத் தூதுவர் எரிக்சொல் ஹெய்ம் ரணிலிடம் விரிவாகஎடுத்துக் கூறியதுடன் ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடுதறிந்து அறிந்துகொண்டார்.

இதே வேளை இந்திய தூதுவர் கோபால கிருஷ்ண காந்தியையும் நேற்றுக்காலை எரிக்சொல் ஹெய்ம் சந்தித்துப் பேசியுள்ளார். [வ]

## ஐ. தே கட்சிக்குள் ஏற்பட்ட எதிர்ப்பை சமாளிக்கவே நம்பிக்கையில்லாதீர்மானம்

ஐக்கிய தேசியக் கட்சியின் ... அரசு மீதான நம்பிக்கை ...

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே சமாதான முயற்சியில் ஈடுபட்டுள்ள நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக்சோல் ஹெய்ம்மை மல்லாவியில் சந்திக்கும் ஏற்பாடுகளுடன் சென்ற புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் மீது நேற்று முன்தினம் மாலை கிளைமோர் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது.

விடுதலைப் புலிகளின் சமாதானக்குழு வன்னியின் நெடுஞ்சாலை வழியாக பயணத்தை மேற்கொண்டிருந்த சமயம் அவர்களின் வாகன அணிமீது, கொக்காவில் பகுதியில் வைத்துப் படையினரால் கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக புலிகள் அறிவித்துள்ளனர்.

படையினரால் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலின்போது தமிழ்ச்செல்வனுக்கு பாதுகாப்பளிக்கச் சென்ற ஒருவர் உயிரிழந்துள்ளார், இருவர் காயமடைந்துள்ளனர். தமிழ்ச்செல்வனுக்கு எதுவிதமான காயமு

(8ஆம் பக்கம் பார்க்க)

# கிளைமோர் தாக்குதல் படையினர் நடத்தவில்லை

## இராணுவபேச்சாளர் தகவல்

கொக்காவில் பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் மீதான கிளைமோர் தாக்குதலுக்கும் இராணுவத்தினருக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்தின தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதானத்தூதுக் குழுவினர் மீது இராணுவத்தினர் எந்த விதமான தாக்குதலையும் நடத்தவில்லை எனத் தெரிவித்துள்ளார். (ம)

# அரசு - புலிகளுக்கிடையிலான பேச்சு யூன் மாதம் நெதர்லாந்தில் நடக்கும்

[கொழும்பு]

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமரசப் பேச்சுக்கள் தொடர்பான முக்கிய தீர்மானங்கள் இவ்வாரத்தில்எடுக்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளன.

இருதரப்பு சமரச முதற்கட்டப் பேச்சுவார்த்தை நெதர்லாந்துநாட்டின் ஹேக்நகரில் யூன்மாத முதல் வாரத்தில் நடைபெறுமென்றும் இப்பேச்சுக்களில் அரசு தரப்பு குழுவுக்கு ஜனாதிபதியே தலைமைவகிப்பாரென்றும் அரசஉயர்மட்டங்களிலிருந்து தெரியவருகிறது.

(8ம் பக்கம் பார்க்க)

### புலிகளின் தலைவர்களைச் சந்திக்க

# நோர்வேத்தூதுவர்எரிக்சோல் வன்னி சென்றார் எந்நேரமும்யுத்தநிறுத்தஅறிவிப்புவெளிவரலாம்?

(வவுனியா)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்குடன் நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக்சொல் ஹெய்ம் நேற்று இரவு வன்னிசென்றதாக பித்திய செய்திகள் தெரிவிக்கின்றன

நோர்வேயின் சிறப்புத் தூதுவர்எரிக்சொல்ஹெய்ம் நேற்று மாலை விமானப் படைக்குச் சொந்தமான விசேடஹெலி மூலம் அனுராதபுரம் சென்றடைந்தார்

அனுராதபுரம் சென்றடைந்த தூதுவர் நேற்று இரவுசர்வதேசசெஞ்சிலுவைச் சங்க வழித்துணையுடன் மதவாச்சி செட்டிக்குளம் வீதியூடாக மடுவிற்கு சென்றுள்ளதாகஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

வன்னிசென்றுள்ள சொல்ஹெய்ம் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு. ப தமிழ்ச்செல்வனையும் அதனைத்தொடர்ந்து விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனையும் இன்று காலை சந்தித்து நோர்வேயினால் தயாரிக்கப் பட்டு ஜனாதிபதியிடம் ஒப்புதல் பெறப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஒப்பம் பெறப்படுமென தூதுவரு

8ம் பக்கம் பார்க்க

# எதிர்ப்பை சமாளிக்கவே நம்பிக்கையில்லாதீர்மானம்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சிதலைவருமான ரணில் விக்கிரமசிங்காவுக்கு கட்சிக்குள் எதிர்ப்பு எழும்பியதை அடுத்தே அரசு மீதான நம்பிக்கைஇல்லாப் பிரேரணையை ரணில் விக்கிரமசிங்கா கொண்டு வரவுள்ளதாக இந்துப் பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

அரசு மீதான நம்பிக்கை இல்லாத்தீர்மானம் ஐக்கியதேசியக் கட்சியினரால் தாக்கல் செய்யப்படும்பட்சத்தில் பிரேரணைக்கு ஆதரவாக கட்சிக்குள்ளேயும் வெளியேயும் ஆதரவு திரட்ட முடியுமா? என்ற சந்தேகம் எழும்பி உள்ளதுஎன்றும் அந்தப் பத்திரிகையின்ஆசிரிய தலையங்கத்தில் எழுதப்பட்டுள்ளது (வ)

### வன்னிக்கு ரயர்-ரியூப் அனுப்ப

# படையினர் அனுமதி

(வவுனியா)

இராணுக் கட்டுப்பாடற்ற வன்னிப்பிரதேசத்திற்கு மக்களின் அத்தியாவசிய பாவனைக்குரிய சைக்கிள்ரயர் ரியூப் ஆகியவற்றை எடுத்து செல்வது தொடர்பாகநேற்று இராணுவஉயர்மாநாடுஒன்று

(8ம் பக்கம் பார்க்க)

# ஒருவர் உயிரிழப்பு

(வவுனியா)

நேற்று முன்தினம் கொக்காவில் பகுதியில் விடுதலைப் புலிகளின் சமாதான அணிமீது மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதலில்,

(8ம் பக்கம் பார்க்க)

# ரணில் வாழ்த்து

(கொழும்பு)

அ.இ.அ.தி.மு.க பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதா இரண்டாவது முறையாகத் தமிழக முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டமைக்கு எதிர்க் கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சித்தலைவருமான ரணில்விக்கிரமசிங்க வாழ்த்துக்களைத தெரிவித்துள்ளார். (ம)

# சீனப்பிரதமர்

## இன்று வருவார்

[கொழும்பு]

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்காவின் அழைப்பையேற்று சீனப்பிரதமர் சூறோங்கிஇன்று இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு கொழும்பு வருகிறார்.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வடமராட்சிப் பகுதி மீனவர்கள்

# கடற்றொழில் அமைச்சுக்கு கடிதம்

(வடமராட்சி கிழக்கு)

யாழ்ப்பாணம் வடமராட்சிப் பகுதியில் இருந்து அதிகாலை 4 00மணிக்கு புறக்கோட்டை மீன்சந்தைக்கு லொறிக் கணக்கில் மீன், கருவாடு முதலிய வற்றை எடுத்துச் சென்று தென்பகுதி மக்களின் கடலுணவுத் தேவையைப் பூர்த்தி செய்த யாழ்ப்பாணம், வடமராட்சி மீனவர்கள் இன்று எமது கடலில் தொழில் செய்வதற்கு ஏங்கித் தவிப்பதோடு,

எப்போது நிவாரணம் கிடைக்கும் என சங்கக்கடைகளிலும் பிரதேச, செயலகங்களிலும் நிவாரண அனுமதிப் பத்திரத்திற்காகவும், உலர் உணவுப் பொருட்களுக்காகவும் காத்துக்கிடக்கும் நிலையில்லுள்ளோம் என்பதை மிகவும் கவலையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வாறு வடமராட்சி கிழக்கு மீனவர்களால் கடற்றொழில் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

அக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாகவது;

இவர்களின் அலுவலகத்தில் இம்மாதம் 17 ஆம் திகதி வடமராட்சி மீனவர்களின் தொழில் நடவடிக்கை சம்பந்தமான கூட்டம் நடத்தப்பட விருப்பதாக 11 ஆம் திகதி பி.ப 3. 30 மணிக்கு தொலைபேசி மூலம் எமது திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

எனினும் இது தொடர்பாக எமக்கு எந்தக் கடிதமும் தங்களிடமிருந்து கிடைக்கப் பெறவில்லை. பதிலாக திணைக்கள அதிகாரி தமக்கு கிடைத்த கடிதத்தின் பிரதியை 13 ஆம் திகதி எமக்கு தந்துள்ளார்.

அதன் பிரகாரம் நாம் பயண ஒழுங்குகளை மேற்கொண்டும் பிரயாண அனுமதி உடன் எமக்கு கிடைக்காத காரணத்தினால் குறித்த திகதியில் கலந்து கொள்ள முடியாமையை யிட்டு மனம் வருந்துகின்றோம்.

திட்டமிட்டபடி 17ஆம் திகதி நடைபெறும் கூட்டத்தில் எமது வடமராட்சிப் பகுதியில் வாழும்கடற்றொழிலாளர்கள் சுமுகமான முறையில் தொழில் செய்ய நல்ல முடிவினை எடுத்து உதவுவீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.

அத்துடன் உலர் உணவு வழங்க ஏற்ற ஒழுங்கு செய்து தரவேண்டும் என கேட்டுக் கொண்டிருக்கின்றோம்.

ஆகவே இது விடயத்தில் தாங்கள் எம்மக்களின் வாழ்க்கை சுபீட்சமாக அமைய நல்ல முடிவினை மேற்கொண்டு ஆவனைசெய்வீர்கள் என நம்புகிறோம்.

தங்களால் ஒழுங்குசெய்யப்பட்டகூட்டத்திற்கு சமுகமளிக்கமுடியாமையை இட்டு மனம்வருந்துவதோடு மீண்டும் ஒருசந்திப்புஏற்படுத்தப்படும் போதுதங்களின் அழைப்பு காலக்கிரமத்தில் எமக்கு கிடைக்கப்பெற்று தங்களை நேரில் சந்தித்து கலந்துரையாட ஆவலாக உள்ளோம் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம் என்றுள்ளது. (உ-43)

## இராசி பலன்

17 - 5 - 2001

(வைகாசி 3 வியாழன்)
நவமி காலை 6. 20வரை
பூரட்டாதி முழுவதும்
ராகுகாலம் 1. 23- 2 53
நல்ல நேரம்- 7. 23- 8.53
சித்தம்

**மேடம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, தொழில் சிந்தை, மனமகிழ்ச்சி, பொருள்வரவு.

**இடபம்**
சுபசெய்தி, பணியாளர் உதவி, முயற்சிவெற்றி, உத்தியோகச் சிறப்பு.

**மிதுனம்**
கட்டுப்பாடு, வயிற்றுக் கோளாறு, புதிய திட்டம், அரச நன்மை.

**கடகம்**
வீண்பிரச்சினை, பிரயாண பயம், தொழில்நன்மை, காரிய தாமதம்.

**சிங்கம்**
வாகனவசதி, சுவாரஸ்யம், முயற்சிகைகூடும், நல்லஉணவு கிடைத்தல்.

**கன்னி**
காரியம் கைகூடும், பகைவர் விலகுவர், அதிகாரிகள் வெறுப்பு, திடீர் பயணம்.

**துலாம்**
மனப்பயம், தாழ்வு நிலை, காரியதாமதம், திடீர்நன்மை.

**விருச்சிகம்**
உறவினர் மனஸ்தாபம், மனப்பதட்டம், காரிய அனுகூலம், விரும்பாத உறவு.

**தனுசு**
தனவரவு, முயற்சிவெற்றி, இனிய சம்பவம், வாக்கு மேன்மை.

**மகரம்**
வாக்குக் கலகம், மதிப்புக் குறைவு, காரிய தாமதம், மோகம்.

**கும்பம்**
பெரியோர் ஆசி, கற்பனை மிகுதி, முயற்சி நன்மை, நண்பர்கள் உதவி.

**மீனம்**
மனச்சஞ்சலம், முயற்சி தாமதம், பொருள் விரயம், பிதா சிந்தை.

(பழைய நேரப்படி கணிப்பிடப் பட்டது)

வளவன்

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யா. பல்கலைக் கழக புவியியற்றுறை உதவி விரிவுரையாளர் யோ. யோண் ஜெஸ்லி ஆக்கிய "அடிப்படைப் புவியியல்" நூல் வெளியீடு இன்று வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு யா. இந்துக்கல்லூரியில் குமாரசாமி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

முல்லை மாவட்ட பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ். இரவீந்திரன் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில், ஆசியுரையினை கலைப் பீடாதிபதி பேராசிரியர் எஸ். பாலச்சந்திரனும், வாழ்த்துரையினை பேராசிரியர் இரா. சிவச்சந்திரனும் வழங்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக யா. இந்துக்கல்லூரி அதிபர் அ. சிறீ குமரன் கலந்து கொள்வார். (உ)

## தென்னம் காணிகளில் திருடர் கைவரிசை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை சுருவில் கிராமத்தில் உள்ள தென்னம் காணிகளில் களவுத்தேங்காய் பிடுங்குவோரின் கை மேலோங்கிக் காணப்படுகிறது.

தென்னம் தோட்டங்களில் அத்துமீறி நுழையும் இவர்கள். தட்டிக் கேட்பவர்களுடன் அதிகாரத் தோரணையில் வாதிட்டு வருவதாகவும் கூறுப்படுகிறது. (உ-75)

## இளம் குடும்பப் பெண் நஞ்சருந்தி மரணம்

(யாழ்ப்பாணம்)

இளம் குடும்பப் பெண் ஒருவர் நஞ்சிடம் தஞ்சம் புகுந்து தனது உயிரை மாய்த்துக் கொண்டார்.

திருமணமாகி 17 நாட்களே ஆன உடுவில் முருகமூர்த்தி கோயிலடியைச் சேர்ந்த ரகுநாதன், வளர்மதி (வயது19) என்பவரே நஞ்சருந்தி யா/ போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அங்கு மரணமானார். (உ-104)

## சுன்னாகம் தெற்கு நலன்புரி நிலையத்தில் வசதிகள் மிகக் குறைவு

(மல்லாகம்)

சுன்னாகம் தெற்கு சபாபதி முகாமில் உள்ள மக்கள் போதிய அடிப்படை வசதி அற்ற நிலையில் மிகுந்த பல கஷ்டங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

ஏறத்தாழ 148 குடும்பங்கள் வரைவசிக்கும் இவ் முகாமில் ஒரு சில மலசல கூடங்களே பாவனையில் உள்ளதாக அம்மக்கள் கவலை தெரிவித்தனர்.

அதுமட்டுமன்றி குடிநீர் வசதியும் அரிதாகவே உள்ளதாகவும் மழைகாலங்களில் இவற்றினால் சுகாதார சீர்கேடுகள் ஏற்பட வாய்ப்பு ஏற்பட்டிருப்பது குறித்தும் சுட்டிக்காட்டியுள்ளனர். (உ-22)

## இல.வங்கி யாழ். கிளையில் குறைந்த வட்டியுடன் நகை அடைவு பணி

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் யாழ்ப்பாணம் மேற்தரக் கிளையில் நகை அடைவுபிடிப்பது, மற்றும் வெளிநாட்டு நாணய மற்றுப் பணி கடந்த சித்திரை வருடப் பிறப்பு தினத்தில் இருந்துமேற்கொள்ளப் பட்டு வருவதாக யாழ். மேற்தரக்கிளை முகாமையாளர் அறிவித்துள்ளார்.

மேலும்வெளிநாட்டு நாணயப் பெறுமதி தனியார்கடைகளிலும் பார்க்க அதிகப்படியாகவே வழங்கப்பட்டு வருவதாகவும், அடைவுநகைகளுக்கு குறைந்த வட்டி வீதமே அறவிடப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-10)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

இராமநாதன் நுண்கலைக் கழகம்

## நுண்கலைமாணி

(இசை-நடனம்-சித்திரமும்வடிவமைப்பும்)

கற்கை நெறிக்கான பல்கலைக்கழக

## அனுமதி 2000-2001

மேற்படி பட்டப் படிப்பிற்கான கற்கை நெறிகளுக்கு அனுமதி பெற விரும்பும் தகுதி யுடையவர்களிடம் இருந்து 2001-06-30 ம் திகதி வரை விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

### கற்கை நெறிக் காலம் - நான்கு வருடம் அனுமதிக்கான பொது நிபந்தனைகள்

1999 , 2000 ஆண்டு க.பொ த உயர்தரப் பரீட்சை முடிவுகள் அனுமதிக்காக எடுத்துக்கொள்ளப்படும்.

1. அனுமதிக்கு தகுதி யுடைய பழைய பாடத் திட்டத்தின் கீழ் நான்கு பாடங்களை எடுத்த ஓர் அபேட்சகர்.

(அ) க.பொ.த உயர் தரப் பெறுபேற்றில் மொத்தப் புள்ளிகள் 180க்கு குறையாமல் பெற்று, பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதி பெற்றவராயும் இருத்தல் வேண்டும்.

2)புதிய பாடத்திட்டத்தின்கீழ் 2000ஆகஸ்ட்டில்நடைபெற்ற க.பொ.த உயர்தரப்பரீட்சையில் மூன்று பாடங்களை எடுத்தஓர் அபேட்சகர்

(அ)மூன்று அங்கீகரிக்கப்பட்ட பாடங்களிலும் சித்திபெற்று 135க்கு குறையாத மொத்தத் திரட்டுப் புள்ளியைப் பெற்றிருக்கவேண்டும். அத்துடன்

(ஆ)பொது சாதாரண வினாத்தாளில் 30%ற்குக் குறையாத புள்ளியைப் பெற்றிருத்தல்வேண்டும்.

**நுண்கலைமாணி. இசை**

மேற்குறிப்பிட்ட கற்கைநெறிக்கு விண்ணப்பிப்பவர்கள் க.பொ த உயர்தரத்தில் சித்திபெற்ற பாடங்களில் சங்கீதம்ஒருபாடமாக இருத்தல்வேண்டும்.

**நுண்கலைமாணி- நடனம்**

நுண்கலைமாணி-நடனம்கற்கைநெறிக்கு விண்ணப்பிப்பவர்கள் க.பொ.த உயர்தரத்தில் சித்திபெற்ற பாடங்களில் பரதநாட்டியம் ஒருபாடமாக இருத்தல் வேண்டும்.

**முக்கியகுறிப்பு**

அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் பல்கலைக் கழகத்தினால் நடாத்தப்படும் ஆற்றுகைப்பரீட்சையில்சித்தி பெறுதல் வேண்டும்.

நுண்கலைமானி ,சித்திரமும் வடிவமைப்பும்.

க.பொ.த உயர்தர தகமையுடன் பல்கலைக் கழகத்தினால் நடாத்தப் படும் தகுதிகாண் பரீட்சையில் AptitadeTest சித்தியடைதல் வேண்டும்.

**முக்கிய குறிப்பு**

விண்ணப்பத்துடன் க.பொ.த உயர்தரப் பெறுபேற்றுப் பத்திரத்தினதும், மொத்தப் புள்ளிகளினதும் போட்டோப் பிரதிகளை எல்லா விண்ணப்ப தாரிகளும் இணைக்க வேண்டும்.

க.பொ.த உயர் தரத்தில் மூன்று பாடங்களில் மட்டும் சித்தி பெற்றோர் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றமையை நிரூபிக்கும் ஆவணத்தின் போட்டோப் பிரதியும் விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

மேற்குறித்த கல்வித் தகைமைக்கு அமையாத, பூரணப் படுத்தப்படாத, குறிப்பிட்ட ஆவணத்தின் போட்டோப்பிரதி இணைக்கப்படாத , தெளிவில்லாத, விண்ணப்ப முடிவுத் தேதிக்கு முன்னர் கிடைக்கப் பெறாத விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப் படும்.

விண்ணப்பப் படிவங்களை யாழ் பல்கலைக் கழக சிறாப்பர் கரும பீடத்திலோ, யாழ் பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள மக்கள்வங்கிக் கிளையிலோ, ரூபா 50 ஐ செலுத்தி பற்றுச்சீட்டை பரீட்சைகளும், அனுமதிகளும், கிளையில் சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

தபால்மூலம் பெறவிரும்புவோர் நிதியாளர், யாழ்.பல்கலைக்கழகம் என்னும்பெயருக்கு ரூபா50/-செலுத்தி பெற்றுக்கொண்ட காசுக்கட்டளையுடன் முத்திரை ஒட்டப்பட்ட சுயவிலாசமிடப்பட்ட 20 × 10செ மீ அளவுள்ள கடிதஉறையை கொழும்பு ஸ்ரோஸ்/அலுவலகம், EG4, செல்ரல்றோட், கொழும்பு-12. தொலைபேசி இல-435620 எனும் முகவரிக்கு அல்லது உதவிப் பதிவாளர்; பரீட்சைகளும் அனுமதிகளும்கிளை யாழ்.பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம். அல்லது உதவிப் பதிவாளர். வவுனியா வளாகம் வவுனியா எனும் முகவரிக்குஅனுப்புவதன்மூலம்பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பதாரி ஒன்றிற்கு மேற்பட்ட படிப்புத் துறைக்கு விண்ணப்பிப்பதாயின் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பங்கள் 23 × 10 செ.மீ அளவுகொண்ட கடிதஉறையில் இடதுபக்க மூலையில் நுண்கலைமாணி(இசை/நடனம்/சித்திரமும் வடிவமைப்பும்) கற்கைநெறிக்கான விண்ணப்பம்எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால்மூலம் அல்லதுநேரில்சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**விண்ணப்பம் அனுப்ப/ஒப்படைக்க வேண்டிய முகவரி:**

**உதவிப்பதிவாளர்/கலைப்பீடம்,**

யாழ். பல்கலைக்கழகம், **பதிவாளர்.**
யாழ்ப்பாணம். (கி-1995)

# நாவாந்துறை மீனவர் சங்கப் பிரதிநிதிகள் அமைச்சர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)
நாவாந்துறைப் பகுதியில் உள்ள சென் நீக்கிலாஸ் கடற்றொழிலாளர் சங்கம் மற்றும் சென் மேரிஸ் கடற்றொழிலாளர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கடலில் தொழில் செய்யும் நேரத்தை கூட்டித்தருமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது படையினர் தொழிலாளர்களை அதிகாலை 5 மணிக்கு கடலுக்கு செல்ல அனுமதிப்பதாகவும், தமது தொழில் இறால் பிடிக்கும் தொழில் ஆகையால் அதிகாலை 3 மணி முதல் கடலில் இறங்க அனுமதிக்க நடவடிக்கை எடுக்கும்படியும்,

இதேவேளை, பண்ணைப்பாலம் மற்றும் பண்ணை றோட்டில் உள்ள கடற்போக்குகளுக்கு குறுக்காக பாதுகாப்புக் காரணத்திற்காக கம்பி வலைத் தடுப்புக்கள் பல இடப்பட்டிருப்பதால் கிழக்குக் கடலில் மீன்பிடியில் ஈடுபடும் நாவாந்துறை மீனவர்கள் பாதிப்படைந்துள்ளதாகவும் இத்தடுப்புகளை எடுக்கும்படியும் அமைச்சரிடம்சங்கப் பிரதிநிதிகள் மேலும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாதுகாப்புப் படையினருடன் பேச்சு நடத்தி, சங்கப் பிரதிநிதிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றித்தருவதாக அமைச்சர் உறுதியளித்துள்ளார். [உ]

# சாவ. வணிகர் கழகம் அமைச்சரிடம் மகஜர்

(மந்திகை)
தென்மராட்சி பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த வணிகர்கள் வியாபார நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு வட்டியில்லா நீண்டகால தவணைக்கடன் வசதிகளை ஏற்படுத்தித்தருமாறு கோரி சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் மகஜர் கையளித்துள்ளனர்.

அம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

கடந்த வருடம் மே மாதம் தென்மராட்சி பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த வணிகர்கள் வணிக நிலையங்களை இயக்க முடியாது பல அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந் நிலையில் அவர்களுக்கு வட்டியில்லாத நீண்ட தவணைக் கடனுதவி பெற்றுத்தர வேண்டும்.

இடம்பெயர்ந்த வணிகர்களின் வணிகர்கள் தமது வணிக நிலையங்களுக்கு இழப்பீட்டை பெறுவதற்கு ஆவன செய்யுமாறும் இதுவரை சாவகச்சேரி நகர் செல்லாத வணிகர்கள் அங்கு சென்று சேதமடைந்த கட்டிடங்களைப் பார்வையிடவும், சேதமடைந்த தளபாடங்கள், ஆவணங்களை மீட்டு வருவதற்கும் அனுமதியினை பெற்றுத்தர வேண்டும் எனவும், நிற்கதியற்று நிற்கும் எங்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள் என நம்புகின்றோம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-23)

# தேசிய சுகாதார வாரம் இம்மாத இறுதியில்

(ஊர்காவற்றுறை)
இலங்கையில் தேசிய சுகாதாரவாரம் இம்மாதம் 21 ம் திகதி முதல் 27 ம் திகதி வரை அனுட்டிக்கப்படவுள்ளது.

இலங்கை சுகாதார அமைச்சின் செயலாளரினால் இவ்விடயம் தொடர்பாக சுற்றுநிருபம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

'நல்வாழ்க்கைக்குதொற்று நோய்களைத் தடுப்போம்' என்ற தொனிப் பொருளில் தேசிய சுகாதார வாரம் கொண்டாடப்படவுள்ளது.

அந்தவகையில் தேசியசுகாதாரவாரகாலத்தில் தொற்று நோய்கள் சம்பந்தமாகவும் அவற்றின் ஆபத்துக்கள் தொடர்பாகவும் கருத்தரங்குகள், கண்காட்சிகள, வீடியோப்படக் காட்சி, கலந்துரையாடல், மூலம்மக்களுக்கு ஆலோசனைகளும், வழிகாட்டல்களும் வழங்கப்படவுள்ளதுடன் சிரமதான நடவடிக்கைகளும்இடம்பெறவுள்ளது

இவ்வாரத்தில் சுகாதாரம் சம்பந்தமாக மாணவர்களுக்கிடையில்கவிதை, கட்டுரைப் போட்டிகள் என்பனவும் நடத்தப்படவுள்ளமையும்,

யாழ். மாவட்டத்திலும் சுகாதார விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் பரவலாகஇடம் பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. [உ-75]

# பத்தைமேனி மக்களுககு அச்சுறுத்தலாய் இருந்த கள்வர் குழு கைதானது

(ஆவரங்கால்)
அச்சுவேலி பத்தைமேனிப் பிரதேசத்தில் ஒரே இரவில் பல வீடுகளில் புகுந்து தமது கைவரிசையைக் காட்டிச் சென்ற பலே கில்லாடித் திருடர்களில் ஐவர் அச்சுவேலிப் பொலிஸாரின் தீவிர முயற்சியின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இம் மாதம் 12 ஆம் திகதி நள்ளிரவு வேளை திருடர் குழுவொன்று பத்தைமேனிக் கிராமத்தில்புகுந்து 5 வீடுகளில் தங்க நகைகளையும் பெறுமதிமிக்க சொத்துக்களையும் களவாடியதுடன்,

10 இற்கும் மேற்பட்ட வீடுகளில் திருட எடுத்த முயற்சி கைகூடவில்லை.

இத்திருட்டு முயற்சியின் போது கள்வர் ஒருவர் கத்தி வெட்டுக்கு இலக்காகிய நிலையில் தனது இரத்தம் தோய்ந்த கீழ் ஆடையை அப்பகுதி தோட்டக் காணியில் கழற்றி எறிந்துவிட்டு சென்றுள்ளார்.

மறுதினம் இதனைக் கண்ணுற்ற பொதுமக்கள் அச்சுவேலிப் பொலிஸாரிடம் கொடுத்த முறைப்பாடு மற்றும் வேறுபல தகவல்களின் அடிப்படையில் திருட்டுச் செயலுடன் தொடர்புடைய மூவர் கைதுசெய்யப்பட்டனர்.

மேற்படி மூவர் மீதான விசாரணைகளின் போது தம்முடன் இணைந்து செயற்படும் ஏனையோரது பெயர்களை வெளியிட்டதையடுத்து அவர்களில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மற்றையோரைக் கைது செய்து உரிய சட்ட நடவடிக்கைஎடுக்கும்பணியில்அச்சுவேலிப் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (உ-57)

# கிழக்கிலங்கைசெல்லும் யாழ்.மாவட்ட விளையாட்டு வீரர்கள் விபரம்

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்டத்தில் உள்ள வலைப்பந்தாட்ட, கூடைப்பந்தாட்ட, பூப்பந்தாட்ட அணிகள் எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை கிழக்கிலங்கை செல்லவுள்ளன.

கூடைப்பந்தாட்ட அணி (ஆண்கள்)வீரர்களின் விபரம் வருமாறு.

சி. சிறிகரன், அ. அன்ரன் ஜெனின், ந. சாந்தகுணகரன், ந. சுரேஸ்குமார், இ கண்ணா, க. அகிலன், தே. அருட்செல்வன், செ. சசிக்குமார், நீ. முரளிதரன், ம. ரதீஸ்குமார், ஆ. மரிஸ்நியூட்டன், அ.செடிலான்.

பெண்கள் அணி

அ மதிவதனா, க. மேரிகெவின், யூலிற், கு. பவானி, க. மிதிலா, இ. நித்தியா இ. நிசாந்தி, நீ. வக்சலா தே. கௌரி, செ. தமயந்தி, செ. சுகந்தினி.

வலைப்பந்தாட்ட அணி (பெண்கள்)

த. காந்திமதி, பூ. மைதிலி சூ. சியாமளா ம மாலினி, கெ. சுரோமி, ஜெயடிலின் ரேமிந்தா, வி. சங்கீதா பே பிரியதர்சினி, செ. குவாயினி, நோறின் நீதியா ரீச்சாட், சு. சிவகௌரி சி. அஜந்தா.

இவ் அணிகளுக்குப் பொறுப்பாகமாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி ஜே. ரூபசிங்கம் மற்றும் எஸ் ரமணன், செல்வி சிறிநளாயினி, சந்திரமதி, மோகனதாஸ் ஆகியோரும் செல்கின்றனர். (உ-10)

## உதவு சபையினர் பார்வையிட்டனர்

(மல்லாகம்)
மருதனார்மடத்தில்அமைந்துள்ள யா/விவசாயக் கல்லூரியின் செயற்பாடுகள், அதன் வளர்ச்சி நிலைகளை அமெரிக்கன் மிஷன் நிதிஉதவு சபையினர் பார்வையிட்டுச் சென்றுள்ளனர். [உ-122[

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)
புதிய ஜனநாயகக் கட்சியின் 23 வது வருட நினைவுக் கருத்தரங்கு கட்சியின் வட பிரதேச செயலாளர் தோழர் கா. கதிர்காமநாதன் தலைமையில் யாழ். நகர் சிற்ஹோல் மண்டபத்தில் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

அறிமுக உரையை தோழர் க.தணிகாசலமும் கருத்துரையை தோழர் சி. கா. செந்திவேலும்நிகழ்த்தவுள்ளனர். (உ)

## குறுகியகால பயிற்சி

மருதனார்மடத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் விவசாயப்பண்ணையில் மிகக்குறுகிய காலப்பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

மேற்படி பயிற்சிக்கு உதவு தொகைகள் வழங்கப்படும் எனவும் இதற்குரிய நேர்முகத் தேர்வுஎதிர்வரும் 23 ஆம் திகதி காலை 9. 00 மணிக்கு இடம்பெறுமெனவும் நிறுவன அதிபர் தெரிவித்தார். [உ-122]

# திருநாவுக்கரசு ம. வி விரைவில் இயங்கும் துரித கதியில் நடவடிக்கை

[மந்திகை]
தென்மராட்சிப் பகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் மீளக் குடியமர்வதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருவதையடுத்து அப்பகுதி பாடசாலைகளை இயக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இதன் முதற்கட்டமாக கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம் இயங்கவுள்ளது.

இடப் பெயர்வின் பின், மீளக்குடியமர்ந்த பாடசாலை மாணவர்கள் மற்றும் அப்பகுதிகளில் மீளக்குடியமரவுள்ளவர்கள் தென்மராட்சி கல்வி வலய பாடசாலையில் கல்விகற்ற ஏனைய பாடசாலை மாணவர்கள் இப்பாடசாலையில் கல்விகற்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது

எனவே இப் பாடசாலையில் கல்வி கற்க விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 25 திகதி வரை காலை 9 மணி முதல் 12 மணிவரை பாடசாலையில் தமது பெயர், வகுப்பு, முன்பு கல்விகற்ற பாடசாலை இடம்பெயர்வின் கல்வி கற்கும் பாடசாலை போன்ற விபரங்களை சமர்ப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார்.

இப்பாடசாலைக்கு செல்லும் மாணவர்களின் எண்ணிக்கையை அடுத்து ஏனைய பாடசாலைகளை இயக்குவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்படுமென வலய கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-23)

# நாரந்தனை ஞானவைரவர் ஆலயம் புனரமைப்பு

(ஊர்காவற்றுறை)
நீண்ட காலமாக கவனிப்பாரற்றுக் கிடந்த நாரந்தனை மத்தி ஞானவைரவர் ஆலயம் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

அண்மையில் இவ் ஞான வைரவர் ஆலய பரிபாலன சபையின் நிர்வாகத் தெரிவு இடம்பெற்ற போது புனரமைப்பு செய்வது தொடர்பாக தீர்மானிக்கப்பட்டது.

பரிபாலன சபைத்தலைவராக இ. துரைச்சாமி, செயலாளராக இ சற்குணராசா, பொருளாளராக கோ ஜெகதீஸ்குமார் ஆகியோரும் 8 நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (உ 75)

### இலவச பாடநூல் விநியோகம்

# வலயங்களிடையே பாரபட்சம் தமிழர் ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)
கல்வி அமைச்சின் அண்மைய புள்ளி விபரங்கள் படி 95 வீதமான இலவசப் பாடநூல்கள் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றது.

எனினும் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 5 வலயங்களுக்கும் சரியான முறையில் நூல்கள் பகிர்ந்து அளிக்கப்படவில்லை.

இலங்கைத் தமிழர் ஆசிரியர்அங்கத் தூதுக்குழு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இச்சந்திப்பின் போது அமைச்சருடன் யாழ். மாவட்டபாராளுமன்ற உறுப்பினர் எஸ். தவராசாவும் உடனிருந்தார்.

ஆசிரியர் சங்கத் தூதுக்குழுவில் சிரேஷ்ட துணைத் தலைவர் திருமதி ச. ஜெயராசா, சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம், யாழ். மாவட்டச் செயலாளர் க. க. குமாரசாமி மற்றும் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல கிளைகளின் செயலாளர்களும மேற்படி சந்திப்பில் தமிழர் ஆசிரியர்சங்கம் சார்பாக அங்கத்துவம் பெற்றிருந்தனர்.

இத்தூதுக்குழு அமைச்சரிடம முன்வைதத விடயங்கள் வருமாறு,

இலவச பாடப்புத்தகங்கள் சில வலயங்களுக்கு மேலதிகமாக அனுப்பப்பட்டுள்ளதையும் சில வலயங்களுக்குமிகக் குறைவாக அனுப்பப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

பாடசாலைகளில் இருந்து பெற்ற தகவல்களின் படி, யாழ். வலயத்தைச் சார்ந்த பாடசாலைகளுக்கு சில வகுப்புக்களுக்கு 40 வீதமான நூல்கள் மட்டுமே கிடைத்துள்ளன.

தரம் மூன்றுக்கு ஆங்கில பாட நூல்பாடசாலைகளுக்கு ஒவ்வொரு பிரதி மாத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

இப்பாடநூல் சில வலயங்களுக்கு மேலதிகமாக அனுப்பப்பட்டுள்ளதை அறியக் கூடியதாக உள்ளது.

இதேநிலை மற்றைய பாடநூலகள் விடயத்திலும் நிலவுகிறது எனறும சுட்டிக்காட்டினர்.

தவிர, தொண்டர் ஆசிரியர் நியமனம, ஆசிரியர்கள் இடம் மாற்றம, தீவக இடமாற்றம, கணனிமூலக்கல்வி, கல்விக்கல்லூரிக்கு நிரந்தரக்கட்டடம், பலாலி ஆசிரியர் கலாசாலை உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர், அதிபர் நியமனங்கள், கொடுப்பனவுகள் ஆகிய விடயங்கள் குறித்து அமைச்சரிடம் விரிவாக எடுத்துக் கூறப்பட்டது. (உ)

## நிர்வாகிகள் தெரிவு

[ஊர்காவற்றுறை]
புளியங்கூடல் மகாமாரி விளையாட்டுக் கழகத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் மகாமாரி சனசமூக நிலைய மண்டபத்தில் இடம் பெற்றது. (உ-75)

# தமிழர்கள் தனிநாடு கோர சிங்களவரே வழி வகுத்தனர்

## பௌத்தாலோக விகாராதிபதி கூறுகிறார்

(கொழும்பு)

இந்த நாட்டில் சுதந்திரம் இல்லாது வாழ்ந்து வந்த தமிழர்கள் தனி நாடு கேட்பதற்கு சிங்களவர்களே வழி வகுத்துள்ளனர்.

இவ்வாறு பௌத்தாலோக விகாரையின் பிரதம குருவான பண்டிதர் ஞானரத்தின தேரர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்து இனப் பிரச்சினையை தீர்த்து வைக்கலாம் என பலர் தப்பான அபிப்பிராயம் கொண்டுள்ளனர்.

இது ஒரு போதும் நடைபெறாத விடயம். ஏனெனில், விடுதலைப் போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொள்ளும் நிலையில் இன்னும் பல இளைஞர்கள், யுவதிகள் தயாராகவுள்ளதை நான் நேரிலே கண்டுள்ளேன்.

தமிழருக்கு சுதந்திரம் இல்லை அவர்களுக்கு நிரந்தர தீர்வு கிடைக்கும் வரை அவர்கள் தனி நாடு கேட்டு போராடுவதற்கு நாமே காரணமாக இருந்துள்ளோம்.

எனவே நிரந்தர தீர்வொன்றுக்கு புலிகளின் பங்களிப்பு அவசியம். போரினால் தீர்வு எட்டப் போவதில்லை, தீர்வு கிடைத்த வரலாறுகளும் இல்லை.

இது விடயத்தில் சில பத்திரிகைகள் பேரினவாதத்திற்கு ஆதரவளித்து வருவதையும் நான் கண்டிருக்கிறேன் என தேரர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தப் போரில் 58 ஆயிரம் தமிழர்களும் 15 ஆயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்களும் பலியாகியுள்ளனர். அதே யுத்தத்திற்கென இம் முறை 12 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது உண்மையில் அவசியமானதா எனவும் கேள்வி எழுப்பியுள்ளார். (உ-5)

## பாதிப்புற்ற பெண்களை அழைத்துவர ஏற்பாடு

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்புப்பெற்றுச் சென்று அங்கு அனுபவித்த பல்வேறு கொடுமைகள் காரணமாக சொந்தநாடு திரும்பும் நோக்கில், பல்வேறு நாடுகளின் பாதுகாப்பு மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள 800 இலங்கைப் பெண்களை விரைவில் சொந்த நாடு அழைத்துவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தொழிற்துறை அமைச்சர் அலவி மௌலானா இதனைத் தெரிவித்துள்ளார்.

மேற்படி 800 பேரும் சவுதி அரேபியா, துபாய், யோர்தான், குவைத், லெபனான் ஆகிய நாடுகளின் பாதுகாப்பு மையங்களில் பாதிப்புற்ற நிலையில் தஞ்சம் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-5)

## பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் சம்பளத்தில் பாகுபாடாம்

(யாழ்ப்பாணம்)

இவ்வருட முற்பகுதியில் பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்களுக்கு அடிப்படைச் சம்பளமாக 4 ஆயிரம் ரூபாவும் அலவன்சாக ஆயிரம் ரூபாவுமாக 5 ஆயிரம் ரூபா மாதம் வலயம் 01 மற்றும் தீவகப் பகுதியில் வழங்கப்பட்டு வருகின்ற வேளையில் வலயம்-2 இல் 3 ஆயிரத்து 500 மட்டுமே வழங்கப்பட்டு வருவதாக புகார் தெரிவித்துள்ளனர்.

இதுவிடயம் தொடர்பாக எதுவித அறிவித்தலும் தமக்கு கிடைக்கவில்லையென வலயம்-2 கல்விப் பகுதியினரால் தெரிவிக்கப்படுகிறதாம்.

இதுவிடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்து பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கான சம்பளத்தை வழங்க வேண்டும் என்று பாதிக்கப்பட்டோர் சார்பில் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

மற்றவருக்கு என்ன நடந்தால் நமக்கென்ன என்ற மனப்பாங்குடன் செயற்படுவது இப்படியான தருணங்களில் பொருத்தமற்றது என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (க)

## கலாசாரப் போட்டிகள் விண்ணப்பிக்கும் இறுதித் தினம் இம்மாதம் 30 ஆம் திகதி

(ஈச்சமோட்டை)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் விருது வழங்கல் 2001 கலாசாரப் போட்டிக்கான ஆக்கங்களையும் விண்ணப்பங்களையும் அனுப்பும் முடிவுத் திகதி இம்மாதம் இறுதிவரை பிற்போடப்பட்டுள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இவ் விருது வழங்கல் போட்டிக்கான கவிதை, கட்டுரை, சிறுகதை, பேச்சு, அறிவிப்பாளர், சித்திரம், வாத்தியம் போன்றவற்றுக்கான விண்ணப்பங்கள் ஆக்கங்களை அனுப்பும்தினம் கடந்த மாதம் 30 ஆம் திகதி என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், போதிய விண்ணப்பங்களும் ஆக்கங்களும் வந்து சேராமையினால் முடிவுத் திகதி இம்மாதம் இறுதிப் பகுதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறுகதை, கவிதை, கட்டுரை, சித்திரம் போன்ற போட்டிகளுக்கு யாழ். மாவட்டத்திலிருந்து விண்ணப்பிக்கும் போட்டியாளர்கள் உரியவிண்ணப்பப்படிவத்தையும் ஆக்கத்தையும் இணைத்து தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மஹரகமவில் இயங்கும் தலைமையகத்துக்கு அனுப்பி வைக்குமாறும்,

பேச்சு, அறிவிப்பாளர், நடனம், வாத்திய இசை, பாடல் போன்றவற்றுக்கான விண்ணப்பங்களை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட பணிமனைக்கு அனுப்பி வைக்குமாறும் யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவி இயக்குநர் சிவதட்சணாமூர்த்தி அறிவித்துள்ளார். (உ-59)

## அங்குரார்ப்பணம்

(மந்திகை)

அரச சேவையிலுள்ள பட்டதாரிகளால் ''அரச சேவையில்உள்ளகீழ் உழைப்பு பட்டதாரிகள் சங்கம்'' அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

அகில இலங்கை ரீதியில் அரசசேவையில் உள்ள கீழ் உழைப்பு பட்டதாரிகளுக்கு உரிய பதவிகளை பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் இச்சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது

இச் சங்கத்துடன் இணைய விரும்புபவர்கள் 345, கோவில் வீதி நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம். (உ-23)

## மாதாந்த கொடுப்பனவு

(மந்திகை)

வடமராட்சிவடக்கு பிரதேச செயலர் பிரிவில் மாதாந்த உதவிப்பணம் பெறுவோருக்கான சித்திரை மாத கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.

பொதுசன மாதாந்த உதவிப்பணம், புற்று நோய் என்பனவற்றுக்கான கொடுப்பனவுகளை பெறுவோர் தத்தமது பிரிவிலுள்ள தபால், உப தபால்அலுவலகங்களில் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்பு பெற்றுக் கொள்ளுமாறு தபால் அதிபர் அறிவித்துள்ளார். (உ-23)

## வாராந்த நிகழ்வு

(யாழ்ப்பாணம)

தொண்டைமானாறு சந்நிதி யான்ஆச்சிரமசைவகலை பண்பாட்டுப பேரவையினரின வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை மு.ப 10 30 மணிக்கு வட்டு யாழ்ப்பாணக்கல்லூரி விரிவுரையாளர் பொ.அருந்தவநாதனின் அறிமுகவுரையைத் தொடர்ந்து, திருமந்திரம் எனும் தலைப்பில் வட்டு. யாழ்ப்பாணக்கல்லூரி விரிவுரையாளர் அ.குமாரவேல் சொற்பொழிவாற்றவுள்ளார். (செ)

## வகுப்புத் தொழிலாளர் சங்கத்தை தொழிற் சங்கமாக பதிவு செய்ய நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய வகுப்புத் தொழிலாளர் சங்கத்தினை ஒரு தொழிற்சங்கமாக பதிவு செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொளளப்பட்டுள்ளது.

இந் நடவடிக்கைகளை வடபிராந்திய வகுப்புத் தொழிலாளர்கள், அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா வழிகாட்டலில் மேற்கொள்ளவுள்ளார்கள்.

வடபிராந்திய வகுப்புத் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் அண்மையில் ஈ.பி.டி.பி. யின் யாழ். மாவட்ட தலைமைச் செயலகத்தில் அமைச்சரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்கள்.

இச்சந்திப்பின்போது, வகுப்புத் தொழிலாளர்கள் தமது சங்கத்தினை தொழிற்சங்கமாக பதிவு செய்ய உதவும் படியும், வகுப்புத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு விசேடகவனத்தின்கீழ்வேலை வாய்ப்பு பெற்றுக்கொடுக்கும் படியும், வகுப்புத் தொழிலாளர் சங்கத்திற்கு ஒரு கட்டடம் அமைத்துத் தரும்படியும் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், யாழ் நகரப்பகுதியில் வர்த்தக நிலையங்கள் சனிக்கிழமைகளிலும் முழு நாளாகவும் இயங்குவதுகுறித்தும் வர்த்தக நிலையங்களில் பணியாற்றும் கடைச் சிப்பந்திகளின் பிரச்சினைகள் குறித்தும் அமைச்சருடன் வகுப்புத் தொழிலாளர் பேச்சுநடாத்தியிருந்தார்கள்.

தொழிலாளர்களின் கோரிக்கைக்கு இணக்கம் தெரிவித்த அமைச்சர் உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக உறுதியளித்துள்ளார். (உ)

## உலக சைவ மாநாடு மொரிசியஸில் நடைபெறும்

[கொழும்பு]

எட்டாவது உலக சைவ மாநாடு எதிர்வரும் செப்டெம்பர் மாதம 7 ஆம் திகதி முதல் 9 ஆம திகதி வரை மொரிசியஸில் நடைபெறவுள்ளது

8 ஆவது உலக சைவ மாநாட்டின் தொனிப்பொருள் 'சைவம் நோக்கு புவிமையம் செயல்' என்பதாகும் என மொரிஸியஸ் தேசிய ஒழுங்கமைப்புக் குழுத் தலைவா பேராசிரியர் அரு. புஷ்பரத்தினம் தெரிவித்துள்ளார்.

மேற்படி,

மாநாட்டில் ஆராய்ச்சி கட்டுரை சமர்ப்பிக்க விரும்புவோரும் மாநாட்டில்பார்வையாளராக கலந்து கொள்ள விரும்புவோரும் உலக சைவப் பேரவையின் இலங்கை கிளைத் தலைவர் கா. தயாபரனுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுகொள்ளப்பட்டுள்ளனர். [உ-9]

## கூ. திணைக்கள கணக்காய்வாளர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுத் திணைக்களத்தில் கணக்காய்வாளர்களாக ஒப்பந்த அடிப்படையில் நான்கு வருடங்களாக கடமையாற்றும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த இருபத்தெட்டு ஊழியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

கூட்டுறவு திணைக்கள கணக்காய்வாளர் சங்கம் தமது உறுப்பினர்களின் நியமனம் தொடர்பாக அண்மையில் அமைச்சர் கே.என் டக்ளஸ் தேவானந்தாவுடன் தொடர்பு கொண்டு பேசியுள்ளதாகவும் அமைச்சர் மேற்படி உறுப்பினர்களின் நியமனத்திற்குரிய ஏற்பாடுகளைச் செய்வதற்குதம்மிடம் உறுதியளித்ததாகவும் சங்கப் பிரதிநிதிகள தெரிவித்தனர். [உ-15]

## ஊர்காவலூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் திரிபோஷா விநியோகம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கீழ் உள்ள பகுதிகளுக்குவழங்கவென மூவாயிரம பைக்கற் திரிபோஷா அனுப்பிவைக்கப்பட்டுள்ளது

நெடுந்தீவு, வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு ஊர்காவற்றுறை, மண்டைதீவு, காரைநகர் ஆகிய பகுதிகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் வைத்திய சாலைகளில் இடம் பெறுகின்ற கிளினிக்குகளில் வைத்து விரைவில் இவை வழங்கப்படவுள்ளன.

இவ்வருட ஆரம்பத்தில் மேற்படி சுகாதார வைத்திய அதிகாரியின் பிரிவுக்கு நலாயிரத்து 500 திரிபோஷா பைக்கற்றுக்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-75)

## மாதாந்த உதவிப்பணம்

[மானிப்பாய்]

வலி.தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களினதும் மற்றும்காசநோய், தொழுநோய், புற்றுநோய் என்பவற்றிற்கான உதவிப்பணம் பெறுபவர்களினதும் மே மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது தபாலகங்களுக்குச் சென்று பணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-120)

## மாநகரசபை கூட்டத்தில் வரவிருக்கும் பிரேரணைகள்

[யாழ்ப்பாணம்]

யாழ். குடாநாட்டில் அதிகரித்துள்ள சட்டவிரோத மதுபான உற்பத்தி, விற்பனை என்பவற்றைஒழித்து சமுதாய சீர்கேட்டினை தடுக்க, யாழ் பல்கலைக்கழக சமூகத்தினரால் மேற்கொள்ளப்படும் மாபெரும் முயற்சியினை ஆதரித்து ஒத்துழைப்பு வழங்குவதோடு சமுதாய சீர்கேட்டை ஏற்படுத்தும் ஏனைய செயற்பாடுகளையும் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேற்படி பிரேரணையை எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள மாநகர சபையின் மாதாந்தப்பொதுக் கூட்டத்தின்போது சபையின் தீர்மானத்திற்கென சமர்ப்பிப்பது என ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் பிரிவு விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், யாழ் நகரின் மத்தியில் கஸ்தூரியார் வீதி, கே.கே.எஸ். வீதி, ஆஸ்பத்திரி வீதி ஆகியவற்றில் அதிகரித்துள்ள போக்குவரத்துச் சீர்கேட்டை சீர் செய்ய உரிய முறையில் நடவடிக்கை எடுப்பதோடு, வர்த்தகர்களின் பங்களிப்பைக் கோருதல்,

சபையின் விதிமுறைகளுக்கு முரணாக நவீன சந்தையில் இயங்கும் சலுசலா நிறுவனத்திடமிருந்து கடைகளை மீளப் பெறுவது உள்ளிட்ட 5 விடயங்களை பிரேரணைகளாக சபையில் சமர்ப்பிப்பதென முன்னறிவிப்பு கொடுக்கப்பட்டிருப்பதாய்தெரிய வருகிறது. (உ)

## இன்று ஒரு தகவல்

# இனிப்பும் கசப்புமுடையது இல்லற வாழ்வு

ஏன் கோப்பியிலேசர்க்கரை போட மறந்தாய் என்று கணவர் கத்துவார். மறந்தும் கோப்பியில் சர்க்கரை போட வேண்டாம் என்று டாக்டர் சொல்லியிருக்கிறார், என்று அந்த அம்மா சத்தம் போடுவார். இது சகஜமாக நாம் பார்க்கிற சமாச்சாரம்தான். இனிப்பாகஇருக்கிறசர்க்கரை இல்லறத்திலே புகுந்து எவ்வளவு சங்கடத்தை உண்டாக்கி விடுகிறது பார்த்தீர்களா?

ஆபிரிக்காவிலே ஒரு செடி இருக்கிறது! அதிலிருந்து டேலிம் என்றுஒருபுரதம்எடுக்கிறார்கள். இதுசர்க்கரையை விடஐயாயிரம் மடங்கு அதிக இனிப்புள்ளதாக இருக்கிறதாம். இயற்கையாகச் செடியிலேயிருந்து கிடைக்கிற இனிப்புத்தானே இது! அதனால், அதை ஆகாரத்தில் சேர்துக்கொள்வதனால் கெடுதல் ஒன்றும் வருவதில்லையாம். இப்போது அதைசூயிங்கம், குளிர்பானங்கள், கால்நடைத் தீவனம் ஆகியவற்றிலெல்லாம் உபயோகப் படுத்துவதற்கு பிரிட்டன், ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளிலெல்லாம் அரசாங்கம் அனுமதி கொடுத்திருக்கிறது. நமது நாட்டிலும் இதனை உணவிலும் மருந்துகளிலும் சேர்ப்பது சம்பந்தமாக ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். மைசூரில் C.F.T.R.I என்னும் நிறுவனத்தில் இதன் இனிப்புத் தன்மையைப் பற்றிவெவ்வேறுகோணத்தில் ஆராய்ச்சி நடக்கிறது.

இதன்இனிப்புத்தன்மையை நாம் உணர்வதற்குச் சர்க்கரையை விட ஒருசிலவினாடிகள் கூடுதலாகஆகும். ஆனால் சாப்பிட்டபின் நமது நாக்கில் ஒரு இனிமையான உணர்வு இருக்கும். இதற்குஇன்னொரு விசேஷத்தன்மையுண்டுஅதாவது உணவில் நாம் சேர்க்கும் வாசனைப் பொருளின் வாசனையை அதிகப்படுத்திக் கொடுக்கும். சரி! இந்த இனிப்பு ஒரு பக்கமிருக்கஇனி கசப்புக்கு வருவோம். உலகத்திலேயே கசப்பான பொருள் டினைற் ரோனியம்சக்கரைட் தான். இதுவே உலகமகா கசப்பு என்று பெயர்வாங்கிய பொருள். கசப்பென்றால்எப் படிப்பட்ட கசப்பு என்கிறீர்களா? இந்தப் பொருளில்ஒரு பங்கு எடுத்து அதை நூறுமில்லியன்பங்குதண்ணீரில்கரைத்தாலும், அத்தண்ணீரில் ஒரு துளியைக் கூட வாயில்வைக்க முடியாத அளவுக்கு சகிக்க முடியாத கசப்பு, இரண்டு அமெரிக்க விஞ்ஞானிகள் தீவிர ஆராய்ச்சியின் பின்னர் இந்தக்கசப்பானபொருளைக் கண்டு பிடித்திருக்கிறார்களாம்.

அது சரி! இவ்வளவு கசப்பான ஒரு பொருளை கண்டுபிடிக்கிறதற்காக ஏன் தலையைப் பிய்த்துக் கொண்டு ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்று கேட்கத் தோன்றும். அதற்குச் சில காரணங்கள் இருக்கிறது. சும்மா பொழுது போகவில்லையென்று இதனைச் செய்து கொண்டிருக்கவில்லை. அது ஒரு நச்சுப் பொருள் அதைச்சாப்பிட்டால் கண்பார்வை தெரியாமல் போய் விடும், கொஞ்சம்அதிகமாகச் சாப்பிட்டால் உயிரே போய் விடும். அந்தஅளவுக்கு விஷம், இந்த மதுசாரத்தைப் போதை தருகிறது என்று நினைத்துக் குடித்து விட்டுப் பலர் ஒரேயடியாகப் போய்ச் சேர்ந்திருக்கிறார்கள்.

இது மாதிரி இவர்கள் போதைக்காக குடிக்காமல் இருக்கிறதற்காக, இந்த உலக மகா கசப்புபொருளில்கொஞ்சம், அம்மதுசாரத்துடன் கலந்து விட்டால் போதும் அதைவாயிலேயேவைக்க முடியாது. சிலகேபிள்களையெல்லாம் எலிகள் கடித்து விடுகிறதல்லவா? அதனால் அந்தக் கேபிள்களில்இந்தஇரசாயனத்தைக் கலந்து விட்டால் எலி அந்தப் பக்கமே வராது.

இனி இந்தக் கசப்பைவிட்டு விட்டுமறு படியும் இனிப்புக்கு வாருங்கள். தேன் இருக்கிறதல்லவா? அதன் உபயோகம் பலருக்கும்தெரியும். புண்ணை ஆற்றக் கூடியசக்திஅதற்குண்டென்பதும் தெரியும். இருந்தாலும் நைஜீரியாவிலேயுள்ள அறுவை சிகிச்சை நிபுணர்கள் புண்களை ஆற்றுவதற்குத் தேனைத்தான் உபயோகப் படுத்துகிறார்களாம், அங்கே ஒரு டாக்டர் மூன்று வருடகாலத்தில் 59 நோயாளிகளைத் தேன் மூலமே குணப்படுத்தியிருக்கிறாராம்தீப்புண் அல்சர் போன்றவற்றையெல்லாம் கூடக்குணப்படுத்தியிருக்கிறாராம். சுத்திகரிக்கப்படாத தேனாக இருக்க வேண்டுமாம். அதைப் புண்ணிலே தடவினால் கொஞ்ச நாளிலேயே ஆறிப் போய் விடுமாம். இனிப்பு கசப்பு இரண்டுமேவாழ்க்கைக்குஅவசியம், இல்லறவாழ்வேஇனிப்பும் கசப்பும் கலந்த கோப்பி மாதிரித்தான். கணவன்மனைவியரில் யார் இனிப்பு யார் கசப்பு என்பதற்கு எம்மிடம் பதிலுண்டு. ஆனால் சொல்லத்தான் துணிச்சல் வேண்டுமே.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# கைதானமீனவர் விவகாரம் இந்தியதூதுவர்யாழ்வருகை

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்படையினரால் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்டுயாழ் சிறைச்சாலையில் காவலில் வைக்கப்பட்டுள்ள 39 இந்திய மீனவர்களையும் கொழும்பில் உள்ள இந்தியபிரதித்தூதுவர் திருப்பாதிகடற்படைஅதிகாரி வைத்தியரட்ணசகிதம்நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்து பார்வையிட்டுள்ளார்.

இந்தியப் பிரதித்தூதுவர் திருப்பாதி மீனவ கைதிகளை சிறைச்சாலையில் பார்வையிட்ட பின் யாழ்மாவட்ட நீதிபதி இ. த. விக்கினராசாவை நீதிமன்றக் கட்டடத்தில் சந்தித்து அவர்களது விடுதலை தொடர்பாக பேசியுள்ளார்.

கைது செய்யப்பட்டுசிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள 39 மீனவர்களின் விடுதலை தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டிருப்பதாக நீதிபதி இ. த. விக்கினராசா தூதுவரிடம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 39 மீனவர்களின்8படகுகளையும், மீன்பிடி உபகரணங்களையும், சமையல் பாத்திரங்களையும் பொலிஸ் பாதுகாப்பில் வைத்திருக்குமாறு நீதவான் ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

தூதுவர் திருப்பாதி நேற்றுறும் மீனவர்களைச் சந்தித்த பின் கொழும்பு திரும்பியுள்ளார். (வ)

## கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் கலந்து கொள்ளும் யாழ் அணி

# இம்மாதம் கொழும்பு பயணம்

(ஈச்சமோட்டை)

இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தேசிய இளைஞர் தினத்தை முன்னிட்டு நடாத்தப்படும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ள யாழ் மாவட்ட தெரிவு கிரிக்கெட் அணியொன்று இம்மாதம் கொழும்பு செல்லவுள்ளது.

14 பேர் கொண்ட யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கிரிக்கெட் தெரிவுக்குழுவுடன் மன்ற அதிகாரிகளும் செல்லவுள்ளனர்.

கொழும்பு, கண்டி, காலி, இரத்தினபுரி போன்ற இடங்களில் இச்சுற்றுப் போட்டி இடம்பெறவுள்ளதாகவும், போட்டித்தொடர் இம்மாதம்25 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதிவரை நடைபெறுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்அணியின் தலைவராக செல்வராசாவும் உபதலைவராகசிவகரனும் அணியின் பயிற்றுவிப்பாளராக சஞ்சயனும் இடம் பெறுவதுடன், மாவட்ட சம்மேளனத் தலைவர் நீக்கிலஸ் பிரபாகரன் உதவி இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர்கள் கோகுலராஜா, மாணிக்கவாசகர், மாவட்ட இளைஞர் சேவை உத்தியோகத்தர் சக்திவேல், மாவட்ட உதவி இயக்குநர் சிவதசணாமூர்த்தி ஆகியோரும் செல்லவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-59)

## பத்திரிகையாளர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், இம் மாதம் 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு இணுவில் வைத்தியசாலையில் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றை நடத்தவுள்ளது.

இப் பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்துகொள்ள சர்வதேசசெஞ்சிலுவைச்சங்க தகவல அதிகாரி ஹர்சாகுணவர்த்தனா யாழ்ப்பாணமவரவுள்ளார். (உ)

## செயற்குழு தெரிவு

(கந்தர்மடம்)

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவன ஒன்றிய செயறகுழு உறுப்பினர்களுக்கான தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

செயற்குழு உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவராக- ஆ. சிவானந்தம், செயலாளராக, ம. செபதீபன், பொருளாளராக. அ. விஜயராஜ், உபதலைவராக- சி. சிவச்செல்வன், உபசெயலாளராக- ந. கிருஸ்ணகுமார், விளையாட்டுசெயலாளராக சி. உஷங்கர், உள்ளகக்கணக்காளராக. வி. பிரகலாதன். (உ-37)

## எரிக்சோலுடன் ஹக்கீம்சந்திப்பு

(கொழுமபு)

நோர்வேயின சமாதானத் தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் முஸ்லிம்காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

தமிழீழவிடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தையின போதுமுஸ்லிம்மக்களின் நிலைபபாடு தொடர்பாகவும் ஆளும்பொதுஜனஐக்கிய முன்னணி அரசுககு முஸ்லிம் காங்கிரசின் ஆதரவுபற்றியும் இச்சந்திப்பில் இருவருமவிரிவாக பேசியுள்ளனர். (இ)

## மிதிவெடியில் காலிழப்பு

(யாழ்ப்பணம்)

அச்சுவேலி பத்தமேனிப் பகுதியில் விவசாய முயற்சியில் ஈடுபட்டிருந்த விவசாயி ஒருவர் மிதிவெடியில் சிக்கி தனது இடது காலின் பாதத்தை இழந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை 4மணியள வில் இடம் பெற்ற இம் மிதிவெடிச் சம்பவத்தில் கணபதிப்பிள்ளை தவராசா (வயது31) என்பவரே இவ்வாறு தனது இடது காலை இழந்த நிலையில் நேற்றுமுன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (வ-77)

# பிரதம நீதியரசர் மீதான குற்றவியல் பிரேரணை நடைமுறைச்சாத்தியமில்லை

(கொழும்பு)

பிரதம நீதியரசர் சரத் என் சில்வா மீது ஐக்கிய தேசியக் கட்சி கொண்டுவர உத்தேசித்துள்ள அரசியல் குற்றச் சாட்டுப் பிரேரணை நடைமுறைச் சாத்தியமில்லை என ஜனதா விமுக்தி பெரமுன தெரிவித்துள்ளது.

பிரதம நீதியரசர் சரத்என். சில்வா மீதான குற்றப் பிரேரணைக்கு சில எதிர்க் கட்சிகள் உடன்பாடாக இல்லை. பிரதம நீதியரசரை பதவியில் இருந்து நீக்குவதற்கான குற்றவியல் பிரேரணைக்கு பாராளுமன்றத்தில் சகல அங்கத்தவர்களும் ஆதரவு வழங்க வேண்டுமெனவும் ஜே. வி. பி தெரிவித்துள்ளது

இதேவேளை ஐக்கிய தேசியக்கட்சி அரசுமீதும், பிரதம நீதியரசர் மீதும் கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பாக அக்கட்சிக்குள்ளேயே முரண்பாடானகருத்துகள் நிலவுவதாகவும் ஜே வி பி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பிரதம நீதியரசரை நீக்குவதற்கு முன்னரும் நடவடிக்கைகள மேற்கொளளப்படடமை குறித்தும் ஜே வி பி சுட்டிக்காட்டியுளளது (வ)

# டி.என்.ஏ பரிசோதனைக்கு அமைச்சு அனுமதிமறுப்பு

(கொழும்பு)

செம்மணி மனிதப்புதை குழியில்இருந்து மீட்கப்பட்ட நான்கு சடலங்கள் தொடர்பாக டி.என் ஏபரிசோதனை செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சு இதுவரைஅனுமதி வழங்காததால் விசாரணைகள தாமதம்அடைவதாக குற்றத்தடுப்பு புலனாய்வு இன்ஸ்பெக்டர் சந்திரதாசா நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

செம்மணிமனிதப்புதைகுழி தொடர்பான வழக்குநேற்று முன்தினம் கொழும்பு பிரதம நீதவான் எ.எ ஆர் ஹெயன் தெட்டுவமுன்னிலையில் விசாரணைக்குஎடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கின் சந்தேகநபர்களான பாதுகாப்புப படையைச்சேர்ந்தஎல் எச் எலலித் துஷ்நமார வை ஜி அத்துலஉதயகுமார. பி-சமர விக்கிரம, வை ஜி பி சசிக பெரேரா எஸ் விஜப சிறிவத்தனா ஆகிய ஐவரும நேற்று முன்தினம நீதமன்றில ஆஜர் செய்யப்பட்டனர்.

ஆறாவது சந்தேக நபரான அதுல்நசார் தலைமறைவாகி உள்ளமைகுறிப்பிடத்தக்கது,

சட்டமா அதிபரினால் தொடரப்பட்ட இவ்வழக்கு யூலைமாதம் 10ம் திகதிக்கு நீதவானால் ஒத்திவைக்கப்பட்டது. (வ)

# அதிகாரியை சுட்டுகொன்ற இராணுவச் சிப்பாய் கச்சாயில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கச்சாய் இராணுவ முகாமில் சிப்பாய் ஒருவருக்கும் லெப்டினன் ஒருவருககுமிடையேயான வாய்த்தகராறு முற்றியதையடுத்து இராணுவச் சிபபாய் இராணுவ அதிகாரியைச் சுட்டுக் கொன்றுள்ளார்.

சிப்பாயினால் சுட்டுக் கொல்லப்பட்ட லெப்டினன் விக்கிரமசிங்காவுக்கும் சிப்பாய்க்குமிடையே றேடியோ சபபந்தமான தகராற்றையடுத்தே இச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக இராணுவ சிப்பாய் கைதுசெய்யபபட்டு சாவகச்சேரி நீதவான் முன்னிலையில் ஆஜா செய்யபபட்ட போது,

நீதவான் அவரை அடுத்த மாதம் 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (ம)

## வீதி திருத்தம்

(பந்துவல)

பருத்தித்துறையில் இருந்து கொடிகாமம் செல்லும் வீதியின் ஒரு பகுதி செப்பனிடப்பட்டு வருகிறது (உ-39)

# திருடுவதற்கு வசதியாக இப்படியும் ஒரு யுக்தி

[யாழ்ப்பாணம]

பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நாட்டப்பட்ட மிதிவெடி அபாயம் குறித்த எச்சரிக்கைப் பலகைகளை வடமராட்சிப் பகுதியில் திருட்டு முயற்சிக்கு சாதகமாகப் பயன்படுத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

மேற்படி பலகைகளை பொதுமக்கள் சென்றுவரும் பகுதிகளில் நட்டுவதன் மூலம் அவர்களை வரவிடாது தடுத்து தமது களவுத் தொழிலை கச்சிதமாக செய்துவருகின்றனர் என அங்கு சென்று வருவோர் தெரிவிக்கின்றனர். [உ-104]

# ஊழலற்ற ஆட்சிக்கு உத்தரவாதம் தரும்ஜெயா

(சென்னை)

தூய்மையான இலஞ்ச ஊழலற்ற துரிதமாகச் செயற்படும் ஆட்சியை மக்களுக்கு வழங்க இருப்பதாக அ இ. அ தி. மு க. பொதுச் செயலரும் தற்போதைய தமிழ் நடு முதலமைச்சருமான ஜெயலலிதா தெரிவித்திருக்கின்றார்.

நேற்று முன்தினம் மாலை அவரது தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த செவ்வி ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் தமிழ் நாட்டில் வறுமைக் கோட்டிற்கு கீழ் யாரும் இல்லாத நிலையை உருவாக்க தான் அயராது பாடுபடப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

அதே வேளை, யாரையும் பழிவாங்கும் எண்ணம் எனக்கு இல்லை ஆனால் தவறு செய்தவர் யாராக இருந்தாலும் தண்டிக்கப்படுவார். எனவும் ஜெயலலிதா கூறியுள்ளார்.

(உ-9)

# தேர்தல் வன் முறையில் 72 பேர் உயிரிழப்பு

(மணிலா)

பிலிப்பைன்ஸில் இடம் பெற்ற தேர்தல் வன்முறைகளில் இதுவரை 72 பேர் உயிரிழந்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

பிலிப்பைன்ஸில் நேற்று முன்தினம் வாக்குப் பதிவுகள் ஆரம்பமாகியது.

அப்பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டு இருந்த போதும் மேற்படி வன் முறைச்சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

பிலிப்பைன்ஸில் 13செனட் ஆசனங்களுக்கும் 209 பிரதிநிதிகள் சபை ஆசனங்களுக்குமான தேர்தல் நடைபெற்றுள்ளது.

அத்துடன் மாகாண ஆளுனர்கள் மற்றும் நகரசபை உறுப்பினர்களுக்குமான தேர்தல்களும் இடம்பெற்றுள்ளன.

இத்தேர்தலில்முன்னாள் ஜனாதிபதி எஸ்ராடாவின் கட்சியினரும் போட்டியிடுவது குறிப்பிடத்தக்கது.

[உ-9]

# இஸ்ரேலின் அகோர தாக்குதலில் மயிரிழையில் தப்பினார் அரபாத்

(ஜெருசலேம்)

பலஸ்தீன பாதுகாப்புத் தலைமை அலுவலகம் மீது இஸ்ரேலியக் ஹெலிகள் நடத்திய றொக்கெட் தாக்குதலில் அங்கு பணிபுரிந்துகொண்டிருந்த பலஸ்தீன தலைவர் ஜஹிர் அரபாத் மயிரிழையில் உயிர்தப்பியுள்ளார்.

அதேவேளை,

மேற்குக்கரை காஸாப் பகுதியில் இஸ்ரேலியப் படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 5 பலஸ்தீனிய பொலிஸார் கொல்லப்பட்டுள்ளனர்.

காஸாவில் உள்ள பலஸ்தீனிய இலக்குகள் மீது இஸ்ரேலிய விமானங்கள் மற்றும் கடற்படைப் படகுகள் சரமாரியாக குண்டு மழை பொழிந்து ஒரு சில மணி நேரத்தின் பின்னர் இஸ்ரேலியத் தரைப் படையினர் நடத்திய தாக்குதலிலேயே மேற்படி 5 பொலிஸாரும் கொல்லப் பட்டுள்ளனர்.

மேற்படி தாக்குதலின் போது பலஸ்தீனியர்களுக்குச் சொந்தமான 8 கவச வாகனங்களும் நிர்மூலமாக்கப்பட்டுள்ளன.

இஸ்ரேல் கடும் ஆயுத பலப் பிரயோகம் செய்து பலஸ்தீனத்தின் மீது மனிதாபிமானமற்ற முறையில் தாக்குதல் நடத்துவதை ஐ நா. செயலாளர் நாயகம் கொபிஅனன் மீண்டும் கண்டித்துள்ளார்.

வன்முறைகள் மூலம் இஸ்ரேல் எதனையும்சாதித்துவிட முடியாது எனவும் அவர் எச்சரித்தார்.

(உ-9)

## சபாநாயகராக காளிமுத்து

(சென்னை)

தமிழக சட்ட சபையின் புதிய சபாநாயகராக அ. இ. அ. தி. மு. க. சட்ட மன்ற உறுப்பினர் காளிமுத்து தெரிவு செய்யப்படவிருக்கிறார்.

இதேவேளை, சட்டசபையின் உபசபாநாயகராக தமிழ் மாநில காங்கிரஸ் கேட்டுள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

காளிமுத்து மதுரைமாவட்ட தேர்தல் தொகுதியிலிருந்து தெரிவானார்.

இவர், அ. இ. அ. தி. மு. க. வின் மூத்த உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது. (து)

# முதல்வர் ஜெயாவுக்கு வாஜ்பாய் வாழ்த்து

## ஆதரவு தேடும் அவசரமோ?

தமிழக முதல்வராக பதவியேற்றுள்ள செல்வி ஜெயலலிதாவிற்கு இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் மலேசியாவில் இருந்து வாழ்த்துத் தெரிவித்துளளார்.

அரசு முறைப் பயணம் மேற்கொண்டு மலேசியா சென்றுள்ள பிரதமர் தமிழ் நாட்டின் தற்போதைய முதல்வராக பதவியேற்றுள்ள ஜெயலலிதாவிற்கு அவரது அமோக வெற்றியைப் பாராட்டி அங்கிருந்து கடிதம் மூலம் வாழ்த்துச் செய்தி அனுப்பி உள்ளதாக நம்பகரமான வட்டாரங்கள்செய்தி வெளியிட்டுள்ளன.

தமிழக மக்களிற்கு ஜெயலலிதா நல்லாட்சி வழங்குவார் என தாம் நம்புவதாகவும் பிரதமர் வாஜ்பாய் தெரிவித்துள்ளார்

(உ-9)

# உல்லாசப்பயணிகளைக் கவர எழுபத்திரண்டு மணித்தியால விஷா

## மொஸ்கோ அறிவிப்பு

(மாஸ்கோ)

உல்லாசப்பயணிகளுக்கான குறுகிய கால விஷாக்களை ரஷ்யா வழங்க முன் வந்துள்ளது.

உல்லாசப்பயணத்துறையை வளர்க்கும் நோக்குடன் உல்லாசப்பயணிகள் ரஷ்யாவில் வந்து இறங்கிய உடனேயே எழுபத்திரண்டு மணித்தியாலத்திற்குள் விஷா வழங்குவதென ரஷ்யா முடிவு செய்துள்ளது.

குறிப்பிட்ட விமான நிலையங்களில் மாத்திரம் வந்திறங்கும் பயணிகளுக்கு குறுகிய கால விஷா வழங்க இருக்கிறது.

மொஸ்கோ சென்பீற்றேஸ் பேக் போன்ற விமான நிலையங்களில் இக் குறுகிய கால விஷா வழங்க ஏற்பாடாகியுள்ளது.

எழுபத்திரண்டு மணித்தியாலங்களுக்கான இந்த குறுகியகால விஷாக்களுக்கு கட்டணமாக இருபத்தைந்து டொலர் அறவிடப்படுமென்று தெரிவிக்கப்படுகிறது.

[து]

உலக தரிசனம்

# தாய்லாந்து படைகளை வெளியேற உத்தரவு

(ரங்கூன்)

பர்மாவில் நிலை கொண்டுள்ள தாய்லாந்து படையினர், உடன் நாட்டை விட்டு வெளியேறுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுளளது.

தாய்லாந்துக்கும் பர்மாவுக்கும் அண்மைக்காலமாக இருந்து வரும் தகராறு காரணமாகவே தாய்லாந்துபடையினரை வெளியேறுமாறு பர்மா பணித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையில் உள்ள பிரதேசம் சம்பந்தமான தகராறு முற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து

# சைத்தான் வேதம் ஓதுவது போல் ஜோர்ச் பெர்ணாண்டஸ் பேசுகிறார்

## வாழப்பாடி சாடல்

(சென்னை)

சைத்தான் வேதம் ஓதுவது போல் இருக்கிறது என்று வாழப்பாடி இராமமூர்த்தி முன்னாள் அமைச்சர்ஜோர்ச் பெர்ணான்டஸ்சைச் சாடினார்.

ஜெயலலிதாவின் வெற்றி குறித்தும் அவர் எப்படிமுதல்வர்பதவியைஏற்கமுடியுமென்றும் இந்தியஜன நாயகம்எங்கு செல்லுகின்றது என்றும்முன்னாள் அமைச்சர் ஜோர்ச் பெர்ணான்டஸ் கூறியதைக் கண்டித்தார் வாழப்பாடி இராமமூர்த்தி'

[து]

# கொரியாக்கள் இடையே கருத்து முரண்பாடு

## ஒன்றை ஒன்று கண்டனம்

(சோல்)

முழு உலகையும் அச்சுறுத்தலுக்குள்ளாக்கும் அமெரிக்காவின்தேசிய ஏவுகணைப் பாதுகாப்புத் திட்டத்திற்கு தென்கொரியா ஆதரவு வழங்குவதை வடகொரியா வன்மையாகக்கண்டித்துளளது.

அத்துடன் தென்கொரியா தனது ஆயுதப்பலத்தை பெருக்குவதுகுறித்தும் வடகொரியா அதிருப்தி தெரிவித்துளளது.

தேசிய ஏவுகணைப் பாதுகாப்புத் திட்டத்தில் அடக்கப்பட்டுள்ள சில ஏவுகணைச் செலுத்திகளைத் தந்துதவுமாறு தென்கொரியா அமெரிக்காவிடம் கேட்டதை சுட்டிக்காட்டிய வடகொரிய அரசு, அமெரிக்கா தனது தேசிய ஏவுகணைப் பாதுகாப்புத் திட்டத்தை வடகொரியாவிற்கு எதிராகப் பயன்படுத்தும் பட்சத்தில் பதில் நடவடிக்கையில் இறங்க வடகொரியா தயங்காது எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

(உ-9)

## விமானப் போக்குவரத்து

இருபது ஆண்டுகளுக்குப் பின் ஈரானும் ஈராக்கும் விமானப் போக்குவரத்தை ஆரம்பிப்பதற்கான பேச்சுவார்த்தையில் இறங்கியுள்ளன.

வாரத்துக்கு இருமுறை பயணிகள் விமானசேவை இடம்பெற வேண்டும் என்றும் பேச்சுவார்த்தையின் போது வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

(து)

# தி. மு. கவின்தோல்வியால் தொண்டர்கள்தற் கொலை

(சென்னை)

நடந்து முடிந்த சட்டசபைத் தேர்தலில் தி. மு. க வெற்றி பெறவில்லை என்ற காரணத்திற்காக அக் கட்சியைச் சேர்ந்த இரண்டு தொண்டர்கள் தீக்குளித்து தற்கொலை செய்துள்ளனர்.

மேற்படி இரு தொண்டர்களது தற்கொலை குறித்து இரங்கல் செய்தி அனுப்பிய தி.மு.க தலைவர் மு.கருணாநிதிதேர்தலில்வெற்றிதோல்வி சகஜமே, ஜனநாயக முறைப்படி நடைபெற்ற தேர்தலில் தோல்வி ஏற்படுவதை இலகுவாக எடுத்துக் கொள்ள வேண்டும் என அனைத்துத் தொண்டர்களையும் கேட்டுக் கொண்டுள்ளார்.

அத்துடன் இறந்த இரு தி. மு. க ஆதரவாளர்களுக்கும் ஒரு தொகைப்பணத்தினை தி.மு.க வழங்கும் என கருணாநிதி உறுதி அளித்துள்ளார்.

[உ-9]

## மஸடோனியா அமைச்சரவை பதவியேற்பு

(லண்டன்)

மஸடோனிய தேசிய அரசாங்கத்தின் அமைச்சரவை உறுப்பினர்கள் கடந்த ஞாயிறன்று சத்தியப் பிரமாணம் செய்துள்ளனர்.

10 வருடங்களுக்கு முன் சுதந்திரமடைந்த மஸடோனியாவில் இரு தடவைகள் கூட்டணி அரசே இடம் பெற்றது!

இம் முறை பிரதான 3 கட்சிகளும் அரசில் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

(உ-9)

# இந்தோனேசியாவின் பாதுகாப்புக்கு அமெரிக்கா உத்தரவாதம்

(ஜகார்த்தா)

தனக்கும் தனது அரசுக்கும் பூரண ஆதரவைஅமெரிக்கா வழங்கஇருப்பதாக இந்தோனேசிய அதிபர் அப்துல் ரகுமான் வாஹிட் தெரித்துள்ளனர்

இந்தோனேஷிய பாராளுமன்றத்திலும் மக்கள் மத்தியிலும் செல்வாக்கு இழந்து வரும் அதிபர் அப்துல் ரகுமான் வாஹிட் தாய்லாந்திற்கு ஒருநாள் விஜயத்தை மேற்கொண்ட பொழுது மேற்படி தெரிவித்தார்.

அவர் செய்தியாளர் மத்தியில் மேலும்தெரிவிக்கையில், தன்னை இந்தோனேஷியாவில் தடுக்கி வீழ்த்த முற்பட்டவர்கள் அமெரிக்கா சென்று ஜனாதிபதி புஷ்சைச் சந்திக்க முற்பட்ட பொழுது அவர் சந்திக்க மறுத்தது. என்னிடம் அமெரிக்கா எவ்வளவு பற்று வைத்திருக்கிறது என்பதைவிளங்க வைக்கிறது என்று தெரிவித்தார்.

மேலும், தெரிவிக்கையில் இந்தோனேஷியாவில்ஜன நாயகம் பாதுகாக்கப்படும் என்றும் இராணுவமும் மக்களும் தன்னை ஆதரிப்பதாகவும் உள்ளூர் செய்தி ஊடகங்கள் தான் தன்னைப் பற்றித் தப்பான கருத்துக்களைவெளியிடுவதாகவு இதேவேளை வெளிநாட்டுச் செய்தி ஊடகங்கள் தன்னைப்பற்றிய உண்மை நிலைப்பாடுகளை வெளியிடுவதாகவும் தெரிவித்தார்.

(து)

# சிரமதானம்

(மண்டைதீவு)

தீவுப்பகுதி தெற்கு பிரதேச அபிவிருத்தித் தொண்டர்களால் சூழல் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், சிரமதானப் பணிகள மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(உ-11)

எப்பொருள்யார்யார் வாய்க்
கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள்காண்பது
அரிது
- குறள்

# வலம்புரி

## இருந்தாலும் இறந்தாலும் கெடுதியே

ஒருவன் ஊருக்கும் மக்களுக்கும் சதா கொடுமையே செய்து வந்தான். அவனது கொடூரச் செயல்களால் மக்கள் வேதனைப் பட்டனர். காலத்தின் நகர்வில் அவனுக்கு அந்தியா காலம் நெருங்கியது. படுத்த படுக்கையாய்க் கிடந்தான். ஒரு நாள் திடீரென ஊர் மக்களை அழைத்து அன்பு மக்களே! நான் உங்களுக்குச் செய்த கொடுமைக்கு நீங்கள் எனக்குத் தண்டனை தர வேண்டும். அதுவும் என்ன தண்டனை தெரியுமா நான் இன்னும் சற்று நேரத்தில் இறந்து விடுவேன். அதன் பின் என்னை ஊர்ஊராகக் கட்டி இழுங்கள் அதுவே எனக்கு பிராயச் சித்தமாகுமென்றான்.

இதனைக் கேட்ட ஊரவர்களும் கெட்டவனும் மரணத்திலாவது திருந்தி விடுவான் என்ற நம்பிக்கையில் உன் விருப்பப் படியே செய்கிறோம் என்றனர்.

அவ்வளவு தான் அவன் இறந்துவிட்டான். உடனே அவனது விருப்பப்படி ஊரார்ஒன்று கூடி இறந்த உடலைக் கட்டி யிழுத்தனர். என்னே ஆச்சரியம் சற்று நேரத்திற்குள் விரைந்து வந்த பொலிஸார் அங்கு நின்றவர்களைக் கைது செய்தனர் கைதான ஒருவர் பொலிஸாரிடம் ஐயா! இறந்தவரின் விருப்பப்படியே சடலத்தைக் கட்டி யிழுத்தோம் என்றார். அதற் பொலிஸார் ஓர் கடிதத்தைக் காட்டிஇதோ இறந்தவன் எழுதிய கடிதம், தான் இறந்த பின்பு ஊரெல்லாம் கூடி கட்டியிழுக்கப் போவதாக முறைப்பாடு செய்துள்ளான் என்றனர்.

அப்போது தான் கெடுதியானவன்உயிரோடு இருந்தால் மட்டுமல்ல, அவன் இறந்தாலும் ஆபத்திருக்கிறதென்ற உண்மையை ஊரார் புரிந்து கொண்டனர்.

இந்தக் கதை இவ்விடத்தில் ஏன் வந்தது என்று நீங்கள் கேட்டால் எங்கள் நாட்டுப் பிரதமரின் பேச்சைக் கேட்டவுடன் ஞாபகத்திற்குவந்தது அவ்வளவு தான்.

அந்தியா காலம் நெருங்கும் போதும் யுத்த நிறுத்தம் வேண்டாம், சண்டைக்குத் தயாராகுங்கள் என்றெல்லாம் கூறும் அவரின் இறுதியும் ஆபத்தானதென உணர்ந்தால் சற்று விலத்தியே நின்று விடலாமல்லவா?

# குடாநாட்டில் குன்றிவரும் வளங்களைப் பேண

# குடிமக்களின் பங்களிப்பு மிக அவசியமாகும்

க. இராசேந்திரம்
திட்ட உத்தியோகத்தர்
பட்டினிக்கெதிரான நிறுவனம்
யாழ்ப்பாணம்

யுத்தம் காரணமாக கடந்த இரு தசாப்தங்களாக யாழ். குடாநாட்டு மக்கள் சந்தித்துள்ள பேரழிவுகளில் மனிதவளமும், வனவளமும், நீர்வளமும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. ஒரு மாநிலத்தின் வளர்ச்சிக்கும், வளத்திற்கும்அதன் 1/3 பங்கு நிலமாவது வனவளமாகப் பேணப்பட வேண்டும். இந்த உண்மையும், தேவையும் யாழ். குடாநாட்டு மக்களைப் பொறுத்த மட்டில் இன்று உணரப்படாத விடயங்களாகி விட்டன.

### அழிந்து வரும் வன வளம்

ஆதிகாலத்தில் வாழ்ந்த மக்கள் யாழ். குடாநாட்டை வனவளமும், நீர்வளமும் மிக்க பூமியாகவே கட்டிக் காத்து வந்துள்ளனர். குடாநாட்டின் மழை வீழ்ச்சிக்கும், உணவுத் தேவைக்கும் அக்காலத்து மக்கள் பனை வளத்தைப் பேணி வளர்த்துள்ளனர். விவசாயத்துக்குப் பயன்படுத்தப்படாத நிலங்களில் பனந்தோப்புக்களை உருவாக்கினர். இவற்றை அவர்கள் தமது சொந்த நலனுக்காகவன்றி எதிர்கால சந்ததியினரின் நன்மை கருதியே செய்தனர். சுருங்கக் கூறின் பண்டைக்காலயாழ். குடாநாடு வனவளம் நிரம்பிய பூமியாகவே விளங்கியது.

இந்த யுத்தம் காரணமாக குடாநாட்டில் சுமார் 30 லட்சத்திற்கும் மேற்பட்ட பனை மரங்கள் அழிக்கப்பட்டுள்ளதாக புள்ளி விபரங்களினூடாக அறியக் கூடியதாக உள்ளது. இவை போதாதென்று கற்குவியலாக காட்சியளிக்கும் இன்றைய யாழ். குடாநாட்டில் மீதியாக இருக்கும் பயன்தரும் மரங்களெல்லாம் விறகுத்தேவைக்காக கண்மூடித்தனமாக வெட்டி அழிக்கப்படுகின்றன. இயற்கை தந்த செல்வங்களை மனிதன் துஷ்பிரயோகம்செய்கின்றான். யாழ். குடாநாடு வளம் பெற வேண்டுமாயின் ஏற்கனவே இழந்து போயுள்ள மரவளத்தை மீட்டெடுக்கும் முகமாக பல்வேறு மரக்கன்றுகளை வருடா வருடம் நட்டு வளர்க்க வேண்டும். எதிர்கால சந்ததியினரின் நன்மைகருதி இவ்வாறான புதிய மரங்களை நாட்டிக் குடாநாட்டின் மரவளத்தைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய கடமை யாழ். குடாநாட்டு மக்களையே சாரும்.

### மரங்கள் நடுகை

இது முழுக்க முழுக்க மக்களைப் பொறுத்த விடயமேயன்றி அரச செயற்பாடுகளையோ, அரசசார்பற்ற நிறுவனங்களையோ நம்பியிருக்கும் கருமமல்ல. எனினும் இப்புனித பணியில் கடந்த வருடம் பட்டினிக் கெதிரான அரசசார்பற்ற நிறுவனம் வலிகாமம் பகுதியில் 30 ஆயிரம் பழ மரக் கன்றுகளை பொதுமக்களுக்கு வழங்கி மரவளத்தை மீட்டெடுக்கும் அரிய பணியை ஆற்றியுள்ளார்கள். இது பெரிதும் வரவேற்கப்பட வேண்டிய விடயமாகும்.

### நீர்வளம் குன்றல்

யாழ். குடாநாட்டின் வன வளத்துடன் நீர்வளத்தையும் கவனத்திற் கொள்ள வேண்டும். எமது முன்னோர் வனவளத்துடன், நீர்வளத்தையும் பேணிப் பாதுகாத்து வந்துள்ளனர். அவர்கள் மழை நீரை சேமிக்கும் முகமாகப் பேணிய பலநூறு சிறுசிறு குளங்களும், நீர்த்தேக்கங்களும் இன்று தூர்ந்து போயுள்ளன. அக்கால மக்கள் கூடியளவு மழைநீரைச் சேமித்து எமது பிரதேசத்தின் நந்நீர் வளத்தைப் பெருக்கினர். இன்றே பல நீர்த்தேக்கங்கள் தூர்ந்து விவசாய நிலங்களாகவும், குடியிருப்புப் பகுதிகளாகவும் மாறியுள்ளன. உதாரணமாக இன்றைக்கு 6 - 7 தசாப்தங்களுக்கு முன்னர் கொக்குவில் கோண்டாவில் கிராமங்களின் நடுவில் உள்ள நந்தாவில்குளம் வருடா வருடம் நிரம்பி வெள்ளப் பெருக்கேற்பட்டு காங்கேசன் துறை வீதியை மேவி வெள்ளம் பாய்வதுண்டு. மாரி காலம் முடிந்த பின்பும் பல மாதங்களாக இக்குளத்தின் வெள்ளம் அலைமோதிக் கொண்டிருக்கும். இப்போதெல்லாம் அப்படியில்லை. இதற்கு மாரி மழை பொய்த்துப் போனது ஒரு காரணம். மற்றையது நந்தாவிலை நோக்கிச் செல்லும் வெள்ளம் வாய்க்கால்களும் அவற்றுடன் இணைந்த மதகுகளும் தூர்ந்து போனமையுமே அடுத்த காரணமாகும்.

### சித்திரை சிறுமாரி

சித்திரை சிறு மாரி என்ற வழக்கு யாழ். குடாநாட்டில் நூற்றாண்டு காலமாக நிலவி வந்துள்ளது சித்திரை மாரியால் பல குளங்கள் நிறைந்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு மக்கள் இடம் பெயர்வதுமுண்டு. இன்று சித்திரை மாரி பொய்த்துப் போனது. காரணம், காடுகளும் மரங்களும் அழிய அழிய மழைவீழ்ச்சியும் பொய்த்து விட்டது. இன்று எமக்கிருக்கக் கூடிய நந்நீர் தேக்கங்களைக் கூட நாம் பாதுகாக்கத் தவறி விடுகின்றோம். குளங்கள் அணைக் கட்டுகள், வாய்க்கால்கள் உரியமுறையில் பேணப்பட்டு நீர் தேக்கப்பட்டால் மழை பொய்க்கும் காலங்களிலும் கூட விவசாயம் பாதிக்காமல் செய்யலாம். எமது பிரதேசம் வானம் பார்த்த பூமியாயினும் எமது முன்னோர்கள் குளங்கள், கேணிகள் தோண்டி நீரைத் தேக்கி மழை பொய்த்த காலங்களிலும் விவசாயம் செய்தனர். அவற்றை இடைக்காலத்தில் கைவிட்டு விட்டோம். குளங்களைத் தோண்டிக் கட்டுவதில் அக்கறை செலுத்தப்படவில்லை. அவை தூர்ந்து போகாமல் தடுப்பதில கூட கவனம் செலுத்தப்பட்டது. மிக மிகக் குறைவு. அக்காலத்து மக்கள் தமது விவசாயத் தேவைகளுக்கு அளவாகவே நீர்ப்பாசனம் செய்தார்கள். இதற்கு அன்றைய நீர்ப்பாச்சும் முறைகளும் உகந்தவைகளாக இருந்தன. இன்றைய நீர்ப்பாசன முறையில் பல ஆயிரக்கணக்கான நீர் இறைக்கும் இயந்திரங்கள் பயன்படுத்துவதால் நிலத்திற்கடியில் உள்ள நீர் தேவைக்கதிகமாக வெளியேற்றப்பட்டு வீண் விரயம் செய்யப்படுகிறது.


### எதிர்விளைவு

எமது உடனடித் தேவைகளைப்பூர்த்தி செய்வதனால் இயற்கைக்கு உண்டாகக் கூடிய பாதிப்புக்கள் என்ன? பின் விளைவுகள் என்ன? என்று சற்றும் சிந்திக்காமல் செயற்படும தன்மையே பெரிதும் காணப்படுகிறது. மக்கள் தனிப்பட்ட முறையில் மட்டுமன்றி திட்டமிடலாளர் தொடங்கி ஏனைய நிர்வாகிகள் வரை அரசாங்கங்களும் அபிவிருத்தி என்ற பெயரில் உடனடித் தேவைகளை நிறைவேற்றுவதில் மட்டுமே கருத்தைச் செலுத்துகிறார்கள். எதிர்காலத்தில இயற்கைக்கு உண்டாகக் கூடிய விளைவுகள் குறித்துச் சிந்திப்பதில்லை. இயற்கையையும் அதன் வளங்களையும் பேணுவதில் கவனம் செலுத்தாமல், சுயநலம் மேலோங்கியதாலேயே இன்றைய கால மாற்றங்களும் இயற்கை மீதான சேதங்களும் எம்மைச் சூழ்ந்துள்ளன.

### மக்களின் கடமை

யாழ் குடாநாட்டில் தோண்டப்பட்டுள்ள பல நூறு குழாய்க்கிணறுகள் மூலம், நிலத்தின் அடிமட்டத்திலுள்ள நன்னீர் ஊற்றுக்கள் துஷ்ப்பிரயோகம் செய்யப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டியதும், கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். மழை பெய்வதற்கான இயற்கைக் காரணங்களை குடாநாட்டு மக்கள் நன்குணர்ந்து அதற்கேற்ற வகையில் இயற்கை வளங்களைப் பேணுவதில் அக்கறைகாட்ட வேண்டும். எமக்கு முந்திய சந்ததியினர் இயற்கையைப் பேணி அதன் வளங்களை அளவோடு பயன்படுத்தியது போல நாமும் அக்கறை காட்ட வேண்டும் யாழ். குடாநாடு வானம் பார்த்த பூமி, வரண்ட பிரதேசம். அதனால் கோடை காலத்தில் பல பிரதேசங்களில் அடிக்கடியும் ஏனைய பிரதேசங்களில வழமையாகவும் தண்ணீர் பஞ்சம் ஏற்படுவதுண்டு. மனிதனுக்கு உணவை விடவும் பிரதான தேவையாக உள்ளது தண்ணீர் ஒரு வேளை உணவைத் தவிர்த்துக் கொள்ளலாம். ஆனால தாகம் வரும்போது தண்ணீர் அருந்தாமல் நீண்ட நேரத்தைக் கழிக்க முடியாது. எனவே தண்ணீரின் தேவையை, அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து கிடைக்கும் மழைநீரைத் தேக்கவும் குளங்களைத் திருத்தவும் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தவும் மரங்களை கண்டபடி தறிக்காமல் இருப்பதோடு மட்டுமன்றி அவற்றைப் பேணி வளர்க்கவும் யாழ். குடாநாட்டின் ஒவ்வொரு பிரஜையும் அக்கறை கொள்ள வேண்டும். இல்லையேல் வருங்கால சந்ததியினர் பசியால் வாடி, பட்டினியல் மடியவும் நேரிடும்.

## சாயி அருளமுதம்



பெறுமதிமிக்க வைரக் கற்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கு இரும்புப் பெட்டி அவசியமாகும். அதுபோலவே நல்லொழுக்கம், விசுவாசம், அன்பு, நல்லவை, தீயவற்றைப்பகுத்தறியும்உணர்வு ஆகியஅருங் கொடைகளைப் பாதுகாத்து வைப்பதற்கு உடம்பு இன்றியமையாததாகும். இவ்வுடம்பைத்தந்தது பெற்றோராகையால் பேச்சு, செயல், நடத்தை ஆகியவற்றில் அவர்களுக்கு உரிய மதிப்பு அளிக்கப்படவேண்டும். லௌகீக தந்தையின் விருப்பங்களுக்கு நீங்கள் செவிசாய்க்காதிருந்தால் வானுறையும் தெய்வத் தந்தை உங்கள்வேண்டுகோளைச் செவிமடுப்பாரென நீங்கள் எப்படி எதிர் பார்க்கமுடியும்? தர்மத்தின் முதற்படி நன்றியுடைமையாகும். குழந்தையின் முதற்கடமை பெற்றோரைக் கனம் பண்ணுதலேயாம். முதற்படி இல்லாதிருக்கும் போது ஏற்றம் பெறுதல் சாத்தியமன்று.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

## ஆலய விவகாரம் அடிதடியில் முடிவு
### நால்வர் படுகாயம்

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் சீரணி நாகம்பாள் ஆலய விவகாரம் தொடர்பாக எழுந்த பிணக்கினால் வீடு புகுந்து தாக்கியதில் நால்வர் படுகாயத்துடன் யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இச் சம்பவம் பற்றி மேலும் அறியப்படுவதாவது மேற்படி ஆலயத்தில் அண்மையில்இடம் பெற்ற வருடாந்த மஹோற்சவத்தில் சுவாமி தூக்குவதில் ஆலய நிர்வாகத்தினருக்கும் மற்றொரு சாராருக்கும் மிடையில் ஏற்பட்ட வாக்குவாதம்கைகலப்பாகமாறியது. ஆனால் இச் சம்பவம் மானிப்பாய் பொலிஸ் நிலையம் வரை சென்று சமரசமாக தீர்த்து வைக்கப்பட்டது.

சில தினங்களுக்கு முன்னர் இச் சம்பவம் தொடர்பாக ஆலயப் பகுதியை அண்மித்த சிலரின் வீடுகளுக்குள் அதிகாலை வேளை கத்திகள், பொல்லுகள் வாள்கள் சகிதம் உள்ளே நுழைந்த குழுவொன்று அங்கிருந்தவர்களைத் தாக்கியதுடன் அவர்களது வீட்டுக் கதவுகளையும் சேதப்படுத்தி விட்டுச் சென்றுள்ளனராம்.

இது சம்பந்தமாக மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(உ-120)

அற்புதமான
வடிவமைப்புக்களைக்
கொண்ட
அழகிய தங்க நகைகளுக்கு
நங்கையர் நாடும் இடம்
நியூ
ராதிகாஸ்
நகை மாளிகை
189. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
(கி/ 1981)

# மட்டக்களப்பில் இரு முஸ்லிம்கள் இராணுவத்தால் வெட்டிக் கொலை

## இனக்கலவரம் வெடிக்கும் அபாயம்

மட்டக்களப்பு ஒட்டமாவடி கேணி நகர்ப்பகுதியில் இரு முஸ்லிம் பொதுமக்கள் இராணுவத்தினரால் கோரமான முறையில் அடித்தும் சுட்டும் கொல்லப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில்ஏறாவூரைச் சேர்ந்த நூர்முகமட் லத்தீன் (வயது 30) மற்றும் பாலாவோடையைச் சேர்ந்த சீனிமுகமது சலீம் (வயது 45) ஆகிய இருவருமே கொல்லப்பட்டவர்களாவர்:

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது: நேற்றுமுன்தினமிரவு மேற்படி நபர்களின்வீட்டுக்குவந்த இராணுவத்தினர், அவர்களை வெளியேவருமாறு அழைத்து நூர்மூகமட்லத்தீன் என்பவரை பொல்லால் அடித்தும் சீனிமுகமது சலீமைத் துப்பாக்கியால் சுட்டும் கொலை செய்துள்ளனர்.

எந்நேரமும் இனக்கலவரமொன்று வெடிக்கக் கூடிய சூழல் அங்கு நிலவுவதாகவும், நிலைமையைச்சமாளிக்கபாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இது இவ்வாறிருக்கமேற்படி நபர்களைக் கொலை செய்த இடத்தில் இராணுவத்தினரின் அடையாள அட்டையொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது: (இ)

CD மூலம்
புதிய, பழைய பாடல்கள்,
பக்திப் பாடல்கள்
பதிவுசெய்து கொள்ள
மிலேனியம்
ஓடியோ
வீடியோ
சென்ரர்
238, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்
(கி-1982)
T. P, 3646

## மிதிவெடியில் கால் இழப்பு

(வவுனியா)

பளை மாசார் பகுதியில் தேங்காய் எடுக்கச் சென்ற பெண்ணொருவர் மிதிவெடியில் சிக்கி தனதுஇடது காலை இழந்துள்ளார்.

உடுத்துறையைச் சேர்ந்த மூன்றுபிள்ளைகளின் தாயான கணேசலிங்கம் ராதா (வயது 32) என்ற பெண்ணே தனது காலை இழந்த நிலையில் மல்லாவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந-5)

### அரசு

அரசுபுலிகளுக்கிடையிலான சமாதானப் பேச்சுக்குறித்து கொழும்பு ஆங்கில தினசரியான டெய்லிமிறர் அரச உயர் பீடத்தலைவர்களிடமிருந்துகருத்துக்களை திரட்டியுள்ளது.

இதனடிப்படையில் முதல் சுற்றுப் பேச்சுக்கள் நெதர்லந்தில் நடைபெறுமென்றும் அதில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கலந்து கொள்வாரென்றும் செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை சிஹல உறுமய கட்சி புலிகளோடு அரசு சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கவுள்ளதை எதிர்த்துள்ளதுடன் யுத்தத்தில் மரணமடைந்த படையினருக்கு அரசு துரோகமிழைக்கிறது என்றும் குற்றஞ் சாட்டியுள்ளது. [இ]

### வன்னிக்கு

நடைபெற்றது:

இந்தமாநாடு511வதுபடையணித்தலைமை அலுவலகத்தில் வன்னிப்பிராந்திய கட்டளைஅதிகாரி மேஜர் ஜெனரல் சாந்த கொட்டகொட தலைமையில் நடைபெற்றது;

இமமாநாட்டில் வவுனியா மன்னார், முல்லைத்தீவு அரசாங்க அதிபர்கள் கலந்து கொண்டனர்.

இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதியில பொதுமக்களின் பாவனைக்குரிய ஒரே ஒரு வாகனமான சைக்கிளின்ரயர் ரியூப் ஆகியவற்றிக்குத் தட்டுப்பாடு நிலவிவருகிறது இதனால் மக்கள்கஷ்டப்படுகிறார்கள் என்றுஅரசஅதிபர்கள் எடுத்துக்கூறியதை அடுத்து போதியளவுரயர் ரியூப்புக்களை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் விநியோசிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக மேஜர் ஜெனரல் சாந்தகொட்டகொட தெரிவித்துள்ளார்: (வ)

### நோர்வே

டன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விடுதலைப்புலிகளுடனான சந்திப்பை அடுத்து இருசாராரது 'யுத்த நிறுத்த அறிவிப்பு' எந்நேரமும் வெளியாகலாம் என்றும் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இச்சந்திப்பின் போது வன்னிக்கான பொருளாதாரத் தடைநீக்கம் புலிகள்இயக்கம் மீதான தடைநீக்கம்தொடர்பாகவும் பேசுவார் களென எதிர்பார்க்கப்படுகிறது:

புலிகளின்தலைவர்களுடன் பேச்சுக்களை நடாத்திய பின் தூதுவர் எரிக்சொல் இன்று மாலை கொழும்பு வருவாரென தூதரகப் பேச்சாளர் தோமஸ்தெரிவித்துள்ளார்[ம

### ஒருவர்...

● எழில்செல்வன் /றூபநிதி (சிவசிதம்பரம், சிவசீலன்) யாழ்மாவட்டம்.

என்ற போராளி உயிரிழந்துள்ளதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். (ந-5)

### பாரிய...

மின்றி தெய்வாதீனமாக உயிர் தப்பினார்.

இக்கிளைமோர் தாக்குதல் சம்பவத்தை அடுத்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் இராணுவம் ஊடுருவியிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் கொக்காவிலில் பாரிய தேடுதல்வேட்டை ஒன்றை விடுதலைப்புலிகள் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை அண்மையில் மடுப்பகுதியில் ஆயர்குழுவினரை வழியனுப்பிவிட்டுத் திரும்பிய விடுதலைப்புலிகள் மீது சிறிலங்காபடையினர் தாக்குதல் மேற்கொண்டமையும் இங்குகுறிப்பிடத்தக்கது; (ம)

நாகம்ஸ்
(சுன்னாகம்)
அர்ஜுன், ஜோதிகா.
மீனா, மணிவண்ணன்
நடித்த
ரிதம்
(சினிமாஸ்லிமிற்றெட்) வெளியீடு
11-00, 2-30 பு. நே:
சனி ஞாயிறு பி. ப 6 மணி
(ரீலீஸ்) (கி-1977)

வலி கிழக்கு பிரதேச சபையினால் நடாத்தப்படும்
கணணிப் பயிற்சி
புதிய பிரிவு ஆரம்பம்

Diploma in PC Application

(1) Introduction to Hard Ware
(2) MS Excel
(3) MS Access
(4) Corel Draw
(5) Visual Basic
} 6 மாதம்

★ இப் பயிற்சி நெறிக்கு க. பொ.த (சா/த) க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
★ மிகக் குறைந்த கட்டணத்துடன், திறமை வாய்ந்த ஆசிரியர்களினால் பாடவிதானங்கள் பயிற்றுவிக்கப்படுகின்றன.
★ செய்முறைப் பயிற்சிக்கு அதிகநேரம் வழங்கப்படும்;
★ மாணவர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
★ விண்ணப்ப முடிவு திகதி 23-05-2001
★ மேலதிக விபரங்களுக்கு தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்;

குறிப்பு: எமது கிளை உரும்பிராய் உப அலுவலகத்தில் ஆரம்பிக்கப்பட இருப்பதால் மாணவர்கள் தமது பதிவுகளை உரும்பிராய் அலுவலகத்தில் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வலி கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி;
14-05-2001

திரு. பூ. குணசிங்கம்
தவிசாளர்
(கி/1997)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

எம் இனிய நண்பன்
திரு. யோ. யோண்ஜெஸ்லி
அவர்களின் ஆக்கமான
'அடிப்படைப் புவியியல்'
எனும் நூல் இன்று வெளிவர இருப்பதையிட்டு
மகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றோம்.

பல்கலைதனில் உன்பணி சிறக்க
எம் இனிய வாழ்த்துக்கள்

உதவி விரிவுரையாளர்கள்
கட்டுரை ஆசிரியர்கள்
புவியியற்றுறை
யாழ். பல்கலைக்கழகம்
(கி-1996)

தங்க நகையுலகில் தமக்கெனத் தனியிடம் பிடித்தவர்கள்
வினோ நகைப் பூங்கா
185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், T. P, FaX - 2824. (கி/ 1997)

இப்பத்திரிகை "வலம்புரி" அச்சக [illegible] இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள [illegible] அமைந்துள்ள அவர் [illegible] அச்சகத்தில் 2001 ஆண்டு மே மாதம் 17ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.